www.tamilarangam.net




SUVADIKAL

# சுவடுகள்

A Tamil Monthly from Norway

உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

## நோர்வேத் தமிழர்களின் தேசீயம்



## தேர்தல்!



பழைய ராசாக்களின்
புதிய ஊர்வலங்கள்

## தமிழகச் சினிமாக்காரர்களும் புலம்பெயர்ந்த தமிழர்களும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

# 20 வது நினைவு

## சிவகுமாரனை நினைவுகூர்வோம்!

ஈழவிடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்த ஆரம்ப காலங்களில் தமது வாழ்வை அதில் ஈடுபடுத்தி உழைத்தவர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பம். மிகவும் நெருக்கடியான நிலைகளில், தமது பாதுகாப்பு உத்தரவாதம் இல்லை என்ற தினசரி நிலையில், மறைந்து வாழ்தலையே தமது வாழ்வாக வரித்துக்கொண்டு தமிழ் மக்களது உரிமைகள் ஆயுதப் போராட்டத்தாலேயே வெல்லப்படலாம் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அந்தச் சிலர் போராடினர். தமிழீழ மக்களின் நலன்களுக்கு விரோதமான போக்குக் கொண்ட அரச படையினரை அழிக்கும் நடவடிக்கைகளைச் சிறிய அளவில் அப்போதுதான் தமிழ்ப் பகுதிகளில் காணமுடிந்தது.

தமிழ் மக்களது விடுதலையும், தமிழீழமும் பாராளுமன்ற வழிகளில்தான் வென்றெடுக்கப் படலாம் என்ற நம்பிக்கையைப் பரவலாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்படுத்தித் திரிந்த சமயங்களில் அந்தப் பொய்த் தோற்றத்தை முறியடித்து ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்த அந்த ஒருசிலரே முன்னின்றுழைத்தனர். அவர்களில் முன்னோடியாகத் திகழ்ந்த ஒருவரும், சிங்கள அரச படையிடம் உயிருடன் பிடிபடக் கூடாது என்ற உறுதியுடன் தனது உயிரைத் தானே மாய்த்துக் கொண்டவருமான சிவகுமாரன் தன்னுயிர் ஈந்து 20 வருடங்கள் ஆகிவிட்டன. சிவகுமாரன் விடுதலைக்கென நம்பித் தன்னுயிர் ஈந்த காலத்தில் இருந்து இன்றுவரை தமது உயிரைப் பல்லாயிரக் கணக்கான போராளிகளும், மக்களும் களப்பலியாகத் தந்துள்ளனர். சிவகுமாரனின் போராட்ட வழிமுறைகள் தொடர்பாக மாறுபட்ட கருத்துகள் நிலவினாலும், பின்வந்த பல இளைஞர்கட்கு வழிகாட்டியாக, விடுதலைப் போரின் நம்பிக்கை ஒளியாகச் சிவகுமாரன் திகழ்ந்ததை யாரும் மறுக்க இயலாது. அவரது பங்களிப்பு மதிக்கப்பட வேண்டியது. அவரது தியாகம் கௌரவப்படுத்தப்பட வேண்டியது.

சிவகுமாரனின் நினைவை நெஞ்சில் நிறுத்துவோம். சிவகுமாரனதும், உயிரிழந்த அனைத்துப் போராளிகளதும் தியாகங்களை மதிப்பதுடன், அவர்களது கனவுகளை நனவாக்க உழைப்பதே அவர்கட்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக இருக்கும்.

சுவடுகள் ●

www.tamilarangam.net

# வெளிநாட்டவரும் — அதிகரிக்கும் போதைப்பொருள் பாவனையும்

வெளிநாட்டுப் பின்னணியைக் கொண்டவர்களிடையே போதைவஸ்துப் பாவனை ஒப்பீட்டு ரீதியில் அதிகமாகி வருவதாக அண்மையில் வெளிவந்த தகவல்கள் கூறுகின்றன. இவர்களிற் சிலர் தமது அகதி விண்ணப்பங்கள் கையாள எடுத்த நீண்டகாலத்தில் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளதாகவும் அதிர்ச்சியான தகவல்கள் வெளிவந்துள்ளன.

கடந்த வருடம் ஒஸ்லோவின் போதைப்பொருட் பாவனையாளர்களுக்கான சிகிச்சை நிலையம் சிகிச்சையளித்த இருநூற்றிச் சொச்சப் பேரில் வெளிநாட்டவர்கள் 29பேர். இத்தொகை முந்திய வருடம் ஒன்பதாகவே இருந்தது. இந்த வெளிநாட்டவர்களில் ஆசிய, ஆங்கிலோ அமெரிக்கப் பின்னணி கொண்டவர்களே அதிகம்.


93வீதமான போதைவஸ்துப் பாவனையாளர்கள் நோர்வேஜியப் பின்னணி கொண்டவர்கள். கடந்த வருடம் போதை வஸ்தால் ஒஸ்லோவில் மரணமானோரின் தொகை 42. இவ்வருடம் ஆறு மாதத்திலேயே இத்தொகை தாண்டப்பட்டு விட்டது.

16 வயது முதல் 19 வயது வரையான இளைஞர்களைப் பொறுத்தவரை வெளிநாட்டு இளைஞர்கள் குறைவாகவே போதைவஸ்துகளைப் பாவிக்கிறார்கள். போதைவஸ்துப் பாவனையாளர் பற்றி ஒஸ்லோப் பொலிசார் வைத்திருக்கும் தகவற்படி, 1984ல் 3.7%ஆக இருந்த வெளிநாட்டவர்களது எண்ணிக்கை 1991ல் 17.5%ஆக இருந்தது.


● மஹி ○

## நாலு பெரிய.....

ஓவியர்களுக்குக் கற்பனை வளம் அதிகம்தான். அமெரிக்க நாட்டின் முக்கியமான நான்கு ஜனாதிபதிகளின் முகங்களைப் பாரிய அளவில் மலையில் செதுக்கி வைத்துள்ளனர். இதேபோல் நோர்வே ஓவியர்கள் நோர்வேயின் நான்கு முக்கிய இலக்கியவாதிகளின் உருவத்தை ஓவியமாகத் தீட்டியுள்ளனர்.



www.tamilarangam.net



# தேவை ஒரு மீள் புரட்சி

வரலாறு எப்படி யெல்லாம் மாற்றியமைக்கப்படுகின்றது என்பதற்கு இன்றைய தென் ஆபிரிக்க (தெ.ஆ) அரசு ஒரு நல்ல உதாரணமாகும். இந்த நூற்றாண்டின் முடிவில் மட்டுமல்ல இனி என்றென்றிற்குமே இது சாத்தியப்படாது. இது கறுப்பின மக்களின் தலையெழுத்து என கூறியவர்களிற்கெல்லாம் தெ.ஆ ஏற்பட்டுள்ள இன்றைய மாற்றம் நல்லதொரு படிப்பினை. உலகிலேயே மிக மிக மோசமான இன ஒடுக்குமுறையை கையாண்ட முன்னைய வெள்ளை தெ.ஆ அரசிற்கெதிரான கறுப்பின மக்களின் 80 வருடகால உறுதியான எழுச்சிமிகு போராட்டம் வரலாற்றைத் திருத்தியமைத்துள்ளதுடன் உலக ஏகாதிபத்தியவாதிகளிற்கும் சர்வதேச ஒடுக்குமுறையாளர்களிற்கும் தகுந்த பாடத்தை புகட்டியுள்ளனர்.

தெ.ஆ வரலாற்றிலேயே முதற்தடவையாக கறுப்பின மக்கள் வாக்குரிமையைப் பெற்றுள்ளனர். கடந்த சித்திரை மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களில் பங்குபற்றிய கறுப்பின மக்கள் பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைக் கொண்டுள்ளதுடன், ஜனாதிபதியாக முன்னாள் ஆயுட்கால அரசியற் கைதியும் ஆபிரிக்க தேசிய காங்கிரசின்(ANC) முன்னோடிகளில் ஒடிவருமான நெல்சன் மண்டேலாவை ஜனாதிபதியாகவும் தெரிவுசெய்துள்ளனர். கடுமையான போராட்டத்திற்குப் பின்பு தெ.ஆ கறுப்பின மக்களால் மேற்கொள்ளப்பட்ட அரசியற் போராட்டம் வெற்றிபெற்றுள்ளதானது ஒடுக்குமுறைக்குள்ளாகிவரும் உலக தேசிய இனங்களிற்கும் இதற்கெதிராகப் போராடிவருபவர்களிற்கும் ஒரு உந்துசக்தியை வழங்கியுள்ளது. குறிப்பாக இன ஒடுக்கல் கொள்கையை கையாண்ட தெ.ஆ வெள்ளைகளிற்கு அரசியல்ரீதியாக ஏற்பட்டுள்ள இன்றையநிலை சர்வதேச சியோனிஸ்ட்களிற்கும் ஏகாதிபத்தியவாதிகளிற்கும் பல விடயங்களைக் கற்றுக் கொடுத்துள்ளது.

எது எப்படியிருப்பினும் தெ.ஆ நாட்டைப்பொறுத்தவரை நடைபெற்றுள்ள அரசியல் மாற்றம் கறுப்பின மக்களிற்கு முழுமையாக பொருளாதார சமூக அரசியல் சுதந்திரங்களைப் பெற்றுக்கொடுத்துள்ளனவா? என்பது கேள்விக்குறியே. மிகப் பெரும்பான்மையான கறுப்பின மக்கள் கொடிய வறுமையில் வாட மிகச் சிறிய சிறுபான்மை வெள்ளையர்களோ நாட்டில் செல்வச் சிறப்புடன் வாழுகின்றனர்.

திரு. நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக்கப்பட்டுள்ளமையோ, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளமையோ கறுப்பின மக்களின் உண்மையான விடுதலைக்கு எதுவிதத்திலும் வலுச்சேர்க்கப் போவதில்லை. உண்மையை கூறுவதானால் இன ஒடுக்கல் கொள்கைக்கு அப்பாற்பட்ட ஒரு கறுப்புமுதலாளித்துவத்தையே மண்டேலாவும் அவரது ANC கூட்டாளிகளும் விரும்புகின்றனர். இதற்கான ஆதாரங்களை தேர்தலிற்கு முன்பும் தேர்தலிற்கு பின்பும் மண்டேலாவும் ANCயும் விடுத்துவரும் அறிக்கைகளில் இருந்தே அறியக்கூடியதாயுள்ளது.

சுமார் 5%ஐ கொண்ட வெள்ளையர்கள் நாட்டின் செல்வத்தில் மிகப் பெரும்பகுதியை சூறையாடிக் கொண்டிருக்க சுதந்திரத்தின் பின்னும் கறுப்பினத்தவர்கள் கூலிகளாக இருக்கக் கடமைப்பட்டுள்ளனர். சுமார் 50% க்கு மேற்பட்ட கறுப்பினத்தவர்கள் வேலையற்றவர்களாயுள்ளனர். சுமார் 30% கறுப்பினத்தவர்கள் சேரிகளிலேயே வசித்துவருகின்றனர். அதேபோல் 5% வெள்ளையர்களே நாட்டின் செல்வத்தில் 88%த்தைச் சொந்தமாக்கியுள்ளதுடன் 90% பயிர்ச்செய்கை (விவசாய) நிலத்தின் உரிமையாளர்களாயுமுள்ளனர். நாட்டின் கைத்தொழில் உட்பட தொழிற்சாலைகளில் 85% வெள்ளையர்கள் உடமையாகிருப்பதுடன் வெள்ளையரின் மிகப்பெரிய 6 தொழில்நிறுவனங்களே பங்குச்சந்தையில் 90% யும் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளன. இவைபற்றியெல்லாம் மண்டேலாவும் அவரது ANCயும் என்ன கூறுகின்றார்கள் என்பதையும் கவனிப்போம்.

நாட்டின் எந்தவொரு தொழில்நிறுவனமோ அல்லது தனியுடமை சொத்துக்களோ அரசால் தேசிய மயமாக்கப்படமாட்டாது எனவும் மாறாக இதற்கான ஊக்குவிப்புக்கள் அதிகரிக்கப்படுமெனவும் பொது நிறுவனங்கள் (அரச நிறுவனங்கள்) மீதான செலவினக் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படுவதுடன் அவற்றிற்கான மானியங்களும் வெட்டப்படும் எனவும்

www.tamilarangam.net

சர்வதேச நாணயநிதியத்திற்கு உறுதிவழங்கியுள்ளனர் மண்டேலாவும் (ANC)யும்.

இதுமட்டுமல்ல சர்வதேச நாணயநிதியம் மற்றும் உலகவங்கி ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு ஆகியவற்றின் வேண்டுகோளிற்கிணங்க வெள்ளையர் ஆட்சிக்காலத்திலிருந்த மத்தியவங்கி ஆளுனரும் நிதியமைச்சரும் தொடர்ந்தும் புதிய அரசாங்கத்திலும் அதே பதவிகளை வகிக்க வழிவகுத்துள்ள மண்டேலாகறுப்பினக்கூலிகளை விட வெள்ளைமுதலாளிகளிற் கூடிய சேவகம் செய்வதில் ஆர்வம் காட்டுகின்றார். உண்மையில் வெள்ளையரின் இன ஒடுக்குமுறைக்கெதிரான கறுப்பினத்தவர்களின் அரசியல் வெற்றி வெறும் மாயையே வெள்ளை முதலாளிகளின் செல்வங்களின் மீதான □தாக்குதல்களை□ முடக்கிவிடாதவரையில் கறுப்பினத்தவர்கள் வெள்ளையர்களிற்கு நிரந்தர அடிமைகளாக - அதுவும் கறுப்பின ஆளும்வர்க்கத்தவரின் ஒத்துழைப்புடன் சேவகம் செய்யவேண்டிய நிலையே தொடரும்.

கடந்த 80 வருடகால தெ.ஆ கறுப்பின மக்களின் தேசிய விடுதலையை நோக்கும் போது அது படிமுறை வளர்ச்சி கண்டுவந்துள்ளதைக் காணலாம். இன ஒடுக்கல் கொள்கையை எதிர்த்து 1973ல் முதன்முதலாக நாடுதழுவிய வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது இது பாரிய வெற்றியை அளிக்காவிட்டாலும் கறுப்பின மக்கள் ஐக்கியப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. அரசின் இனவெறி கொள்கையை எதிர்த்தது. 1976ல் மாணவர்கள் நடாத்திய மாபெரும் எழுச்சிப் பேரணி வெள்ளையர் ஆட்சியினரிற்கு நிச்சயம் கறுப்பினமக்களின் சக்தியை புரிய வைத்திருக்கும் இவ் மாணவ எழுச்சியின் வெற்றி 80களை தொடர்ந்து தொடர்ச்சியாக நடைபெற்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் ஒரு ஒழுங்குமயப்படுத்தப்பட்ட வெகுஜன சக்தியாக வடிவம் பெற பெருமளவில் வழிகோலியது. 1992இல் ANCயுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கிவிட்டபோதும் Boipatongஇல் நடைபெற்ற அரசியல் படுகொலையைத் தொடர்ந்து சுமார் 4.5 மில்லியன் தொழிலாளர்கள் ஒரே சமயத்தில் வேலைநிறுத்த நோராட்டத்தில் குதித்தனர். இனஒடுக்கல் ஆட்சியாளர்களிற்கு வயிற்றை கலக்கிய இந்நிகழ்ச்சி கறுப்பின மக்களின் அரசியல் சக்தியை உலகம் முழுவதும் பறைசாற்றியது Boipatongஇல் நடைபெற்ற இனப்படுகொலையில் 43 கறுப்பர்கள் அகோரமாக கொலைசெய்யப்பட்டிருந்தனர் மக்களின் ஆவேசத்திற்கு முற் எதுவும் செய்ய முடியாத ANC தற்காலிகமாகவேனும் அரசுடனான பேச்சுக்களை முறித்துக் கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

ANCஇன் முன்னோடிகளில் ஒருவரும் தெ.ஆ கம்யூனிஸ கட்சியின் உறுப்பினருமான Chris Hani 1993ல் படுகொலை செய்யப்பட்டமை கறுப்பின மக்களின் மத்தியில் இருந்த ஒரு சில நம்பிக்கைகளையும் தகர்த்தெறிந்தன. இப்படுகொலையை எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுமார் 2 இலட்சம் பேர் பங்கு கொண்டதுடன் 90% தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். Chris Hani போன்றோரின் மறைவு கறுப்பின மக்களை பொறுத்தவரை ஈடுசெய்ய முடியாத இழப்பே.

சர்வதேச சமூகங்களினால் வெறுத்து ஒதுக்கப்பட்டிருந்த தெ.ஆ முன்னைய வெள்ளையர் ஆட்சிப் பொருளாதார நெருக்கடி காரணமாகவே சமாதானப் பேச்சுக்கு இணங்கியதாகக் கூறப்பட்டாலும் தங்களின் இனஒடுக்கல் கொள்கையும் ஆட்சியும் விரைவில் தூக்கியெறியப்படும் என்பதையும் அதற்கான சூழ்நிலை உருவாகிவந்ததையும் வெள்ளையர் தெளிவாக உணர்ந்திருந்தனர். இதனைச் சாதுர்யமாகத் தவிர்க்க வேண்டுமாயின் ANCயுடனும் மண்டேலாவுடனும் சமரசத்திற்கு செல்வதே ஒரேவழி என்பதை உணர்ந்து கொண்ட வெள்ளையர், வெள்ளம் வருமுன் அணைகட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். ANC பதவிக்கு வருவதன் மூலம் தமது அரசியல் அதிகாரம் பாதிக்கப்பட்டாலும் தமது பொருளாதார வளம் பாதிக்கப்படமாட்டாது என்பதை உணர்ந்து கொண்ட வெள்ளையாட்சியாளர்கள், வெள்ளை முதலாளித்துவத்திற்குப் பதிலாக கறுப்பு முதலாளித்துவத்திலும் தமது நலன்களை உறுதியாகப் பேணலாம் என்பதையும் உணர்ந்து கொண்டனர்.

கறுப்பின மக்களின் அரசியல் பொருளாதார சமூக விடுதலைக்கு மண்டேலாவும் இன்றைய ANC தலைமையும் பதவிக்கு வந்துள்ளமை ஒரு தீர்வாகக் கருதமுடியாது. வெகுவிரைவில் மண்டேலாவையும் ANCயையும் எதிர்த்து கறுப்பின மக்களின் போராட்டம் தொடங்கப்படும் இதுவே கறுப்பு தொழிலாளர்களின் பொருளாதார சமூக விடுதலைக்கு அத்திவாரமாக அமையலாம்.

நிலா.

www.tamilarangam.net

# தேசியமும் நாட்டுப்பற்றும்

ஈழத் தமிழர்களை, ஈழப் போராட்டம் தட்டி எழுப்பியது மட்டுமல்ல, தமது வாழ்வு, தேசம் பற்றிச் சிந்திக்கவும் வைத்தது. இன்று ஈழத் தமிழரின் தேசப்பற்று, இனப் பற்றுப் பற்றிப் பல்வேறு விவாதங்கள் வெவ்வேறு நாடுகளிலும் நிகழ்வதைக் காணலாம்.

ஈழமக்கள் மீதான சிங்கள ஒடுக்குமுறையையடுத்து ஈழத் தமிழர்கள் இன்று பல்வேறு நாடுகளிற் சிதறி வாழ்கின்றனர். உயிரைப் பாதுகாப்பதற்கான வெளியேற்றமாக இவர்களது வெளியேற்றம் இருந்தாலும் தசாப்தத்திற்கு மேலாக இந்த வாழ்வு நிலைபெறும் போக்கே வளர்ந்து வந்திருக்கிறது.

இவ்வாறு இவர்கள் குடிவந்த நாட்டுக்கு, விசுவாசமாக, இந்த நாட்டின் மீதான பற்றுடன் வாழவேண்டுமா என்பது பல தமிழர்கள் தமக்குள்ளேயே கேட்டுக் கொள்ளும் கேள்வி. இந்தக் கேள்விக்குப் பலர் இப்போதும் விடை தேடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

புகுந்த நாட்டின் மீதான விசுவாசம் அந்தந்த நாடுகளில் கிடைக்கும் மரியாதையைப் பொறுத்தும் இருக்கிறது. ஐரோப்பியத் தமிழர்கள் வாழும் நாடுகளைப் பொறுத்து வெவ்வேறு வித 'நாட்டுப் பற்று' காணப்படலாம். அண்மையில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நிகழ்ந்தபோது இதைத் தெளிவாய்க் காண முடிந்தது. தமிழர்கள் தாம் வாழும் நாடுகளுக்கு ஆதரவாக இருந்தார்களா என்பதைக் கொண்டு, அவர்களின் 'நாட்டுப் பற்றை' அளவிட முடிந்தது.

பொதுவாக ஜேர்மனியில் வாழ்ந்த தமிழர்களிடையே பல முரண்பாடுகள் தெரிந்தன. ஜேர்மனியில் வளர்ந்துவரும் நாஸிகளின், வலதுசாரித் தீவிரவாதிகளின் செயற்பாடுகள் அந்த நாட்டின்மீது அங்கு வாழும் தமிழர் சிலர் வெறுப்படையக் காரணமாகிறது.

இன்னொரு விடயம் அவர்களின் அபிப்பிராயத்தில் இருந்து அறியமுடிந்தது. "கடைசித் தடவை ஜேர்மனிதான்

o தவராஜா ரத்தினம்

www.tamilarangam.net

சம்பியனாக வந்தது. இந்தமுறையும் வந்தால், ஜேர்மனிக்கு 'லெவல்' வந்திடும்" என்றார்கள் அவர்கள்.

1. பாடசாலை செல்லும் பிளளைகளின் பெற்றோர் தமது குழந்தைகள் நோர்வேக்கே ஆதரவு வழங்கியதால் தாமும் அவர்களுக்கே ஆதரவு வழங்கியதாகச் கூறினர்.

2. "இந்த நாடு வந்தவுடன் எங்களுக்குப் பாஸ்போட்டும் வேலை அனுமதியும் தந்தது. அத்துடன் இங்கு வாழ்ந்து இந்தச் சூழலுடன் இயைந்தும் விட்டோம். எனவே எம்மை அறியாமலே நோர்வேயை ஆதரிக்கிறோம்" என்பவர்கள் பலர்.

3. "நாங்கள் நன்கு விளையாடும் கறுப்பர் நாடுகளை (மூன்றாம் உலக நாடுகளுக்குத்தான் அந்தப் பெயர்) ஆதரிக்கிறோம். நெடுக சுத்திச் சுத்தி ஐரோப்பிய நாடுகள்தான் வருகின்றன" என்று கூறுபவர்களும் பலர்.

4. ஒரு விடயம் மட்டும் சந்தோஷப்பட வைத்தது. தமிழீழ விடுதலைப் போர் பல விதங்களில் ஈழத் தமிழரது கண்களைத் திறந்தது. கறுப்பர் நாடு வெல்லவேண்டும் என்ற உணர்வு பலரிடம் தோன்றவும் அதுவே காரணம்.

பலரது விருப்பம் ஜேர்மனி தோற்கவேண்டும் என்பது. அது நிறைவேறியது. பலர் பிரேசிலுக்குத் தமது ஆதரவை வழங்கினர். அதுவும் அவர்களது விருப்பப்படி வெற்றிக்கொடி நாட்டியது.

ஈழத்துக் கவி ஜெயபாலன் தஞ்சம் புகுந்த நாட்டை 'சிற்றன்னைத் தாய்நாடு' என்று புது உருவகம் கொடுத்திருந்தார். இந்தப் பிரயோகம் தமிழுக்குப் புதியது. தமிழர்கள் தாய்நாட்டை மறந்து சிற்றன்னை நாட்டுடன் இரண்டறக் கலந்து விடுவார்களோ?




யாதும் ஊரே; யாவரும் கேளிர்

## உலகத் தமிழாராய்ச்சி
### எட்டாம் மாநாடு

1966ல் கோலாலம்பூரில் நிகழ்ந்த முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் தொடராக எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு எதிர்வரும் 1995 ஜனவரி முதல் தேதியில் இருந்து ஐந்தாம் தேதிவரை நிகழ்கிறது.

தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகம் முன்னின்று நடத்தும் இந்த மாநாடு பற்றிய தொடர்புகளுக்கு: செயலாளர், அமைப்புக்குழு, எட்டாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005, இந்தியா.

www.tamilarangam.net

# நேர்கோடு

சுகுமாரன்



இலங்கைப் பாராளுமன்றத்திற்கான பத்தாவது பொதுத் தேர்தல் ஆவணி 16ம் திகதி நிகழவுள்ளது. நாட்டின் வடக்குத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பிரசாரங்கள் மட்டுமன்றி வன்முறைகளும் உச்சமடைந்துள்ளன. கொலை கொள்ளை ஆட்கடத்தல் போன்ற (வழமையான தேர்தற்) சம்பவங்கள் தினசரிச் சம்பவங்களாகியுள்ளன.

வழமைபோல இம்முறையும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான போட்டியே வலுவடைந்துள்ளது. சு.க, எதிர்க்கட்சிகள் பலவற்றுடன் இணைந்து பொதுஜன ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்துள்ள அதே சமயம் கீரியும் பாம்புமாகக் காட்சி தந்த தொண்டா விஜேதுங்கா ஆகியோர் இணைந்து தேர்தற் களத்திற் குதிக்கவுள்ளனர்.

17வருடங்களாகத் தொடர்ந்து நாட்டை ஆட்சி செய்துவரும் ஐதேக முதன்முதலாகக் கடுமையான தேர்தலை எதிர்நோக்குகிறது. எதிரணி வரிசையில் இளம் தாரகையாகச் சுடர்விடும் சந்திரிகா விஜேகுமார ரணதுங்காவின் அரசியல் அலையின்முன் இம்முறை ஐதேக தாக்குப் பிடிக்க முடியுமா என்பது கேள்வியே.

சுதந்திர சிறிலங்காவின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதளவு அதிகளவில் சிறுபான்மைத் தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் போட்டியிடுகின்றன. புளொட், ரெலோ, ஈரோஸ் இணைந்தும் மற்றும் கூட்டணி, ஈபிடிபி, ஈபிஆர்எல்எஃப், தமிழ்க் கொங்கிரஸ், முஸ்லிம் கொங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. இவற்றுக்கும் மக்களுக்குமான உறவு என்ன என்பதை எல்லோரும் அறிவார்கள்.

www.tamilarangam.net

முன்னொரு காலத்திலே விடுதலை வீரர்களாகவும், செயல் வீரர்களாகவும் செயலாற்றிய இவர்கள் இன்று ஐந்து லட்சம் பெறுமதியான பஜீரோ ஜீப்புகளுக்காகவும், பதவிகளுக்காகவும் எதையும் செய்யத் தயாராக உள்ளனர். தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா, ஆண்டபரம்பரை மீண்டும் ஆளநினைப்பதில் என்ன தவறு என்று இரத்தத் திலகமிட்ட முன்னாள் செயல் வீரர்களாகட்டும், தினை விதைத்த செந்தமிழன் தினை அறுப்பானே வினை விதைத்த சிங்களவன் வினை அறுப்பானே என்று பச்சை இனவாதம் கக்கிய முன்னாள் விடுதலை வீரர்களாகட்டும், எல்லோருமே இன்று சிறிலங்கா அரசின் எலும்புத் துண்டுகளுக்காக அலையோ அலையென்று அலைகிறார்கள். புலி எதிர்ப்பு என்ற போர்வையில் இலங்கை அரசுடனும், அதன் கொலைவெறி அரசுடனும் இணைந்து செயலாற்றி வரும் இவர்களால் சாதிக்க முடிந்தது என்ன? தமிழ் மக்கள் மீதான பொருளாதார இராணுவ ஒடுக்குமுறைகளைத் தடுக்க முடிந்ததா? விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் எனக் கூறப்படும் பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தையேனும் நடத்த முடிந்ததா? ஜனநாயகத் தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட்டதாகக் கூறும் இவர்கள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள்?

பாராளுமன்றம் செல்வதன் ஊடாகத் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்குச் சமாதானத் தீர்வு காணப் போவதாகக் கூறிக் கடந்த தேர்தலில் வாக்குறுதி வழங்கிய இவர்கள் தமிழ் மக்கள் மீதான சிறிலங்கா அரசின் கெடுபிடிப் போரைச் சிறிதளவாவது தடுக்க முடிந்ததா? தமிழ் முஸ்லிம் மக்கள் மீதான காட்டுமிராண்டித் தனமான யுத்தம் ஏவிவிடப்பட்ட போது இவர்களால் என்ன செய்துவிட முடிந்தது? வகைதொகையின்றித் தமிழ் மக்கள் கொழும்பில் கைது செய்யப்பட்டு மிருகங்களைவிடக் கேவலமாக சிறைகளில் நடத்தப்பட்ட போது சிறிலங்காவின் அதியுயர் சட்டபீடமான பாராளுமன்றத்தில் இவர்களின் குரல் சிறிதளவிலாவது எடுபட்டதா? இப்படிக் கூறுவதுகூட ஒருவகையில் பாவம். ஏனெனில் இவர்களிற் சில குழுக்கள் இலங்கை அரசுடன் பொலிசுடன் இராணுவத்துடன் இணைந்து தமிழ் மக்களை வேட்டையாடி வருகின்றன. உண்மையில் தொடர்புச் சாதனங்களில் இவர்களுக்கு வழங்கப்படும் சிறிதளவு முக்கியம்கூட தமிழ் மக்கள் மத்தியில் இவர்களுக்கு இல்லை என்பதே யதார்த்தம்.

கடந்த 1989 தேர்தலில் வடக்கில் நிலைகொண்டிருந்த இந்திய ராணுவ உதவியுடன் தனிக்காட்டு ராஜாவாக உலாவந்த ஈபிஆர்எல்எஃப், இன்று ஒரு சிறு தேர்தற் பிரசாரக் கூட்டத்தைக்கூட நடத்த முடியாது தத்தளிக்கிறது. அன்று ஈபிஆர்எல்எஃப் கூட்டாளிகளான ரெலோ, புளொட் இன்று ஈரோஸ் உடன் கூட்டமைத்துள்ளன. ஈபிஆர்எல்எஃப்பின் எதிரியான ஈபிடிபி தீவுப்பகுதியில் தனிக்காட்டு ராஜாங்கம் நடத்தி வரும் அதேசமயம் கூட்டணியோ ஈபிஆர்எல்எஃப்போ அங்கு தலைகாட்ட முடியாத அளவு ஈபிடிபியின் ராணுவ அதிகாரம் அங்கு கொடிகட்டிப் பறக்கிறது.

கூட்டணியின் முன்னாள் நெருங்கிய உறவினரான புளொட் தற்போது கூட்டணி தேர்தலில் நிற்பதையே விரும்பவில்லை. வவுனியாவிலும் அம்பாறையிலும் புளொட் - ரெலோ கூட்டுக்கும், கூட்டணிக்கும் இடையிலான மோதல் வலுத்துள்ளது. அதேபோல் திருமலையில் ரெலோ - கூட்டணி மோதல்கள் வலுத்துள்ளன. ஒரு காலத்தில் கீரியும் பாம்புமாக இருந்த த.வி.கூட்டணியும் தமிழ்க் கொங்கிரசும் நாற்காலி பேரத்தில் உடன்பாடு கண்டுள்ளன. மறைந்த யோகேஸ்வரனின்

www.tamilarangam.net



மனைவி தற்போது கொங்கிரஸ் வேட்பாளர் பட்டியலில் கொழும்பில் போட்டியிடுகின்றார். அதேபோல வன்னி திருமலை அம்பாறை ஆகிய மாவட்டங்களில் த.வி.கூ.ஐ கொங்கிரஸ் ஆதரிக்கின்றது. பதவிகளுக்கும் அதிகாரத்துக்கும் அலையும் இவர்கள் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பதுடன் அம்மக்களுக்கு நிரந்தரத் துரோகம் இழைத்தவர்களாகவுமே கருதப் படுகிறார்கள்.

புலிகளின் ஜனநாயக மறுப்புக்கும் கருத்தொடுக்குமுறைக்கும் எதிராகத்தான் தாங்கள் போராடுவதாகக் கூறும் இவர்கள் உண்மையில் சிறிலங்காவின் இன அழிப்பிற்கே உதவி வருகின்றார்கள். தமது போராட்டத்தில் உண்மை, நியாயம் இருக்குமெனில் அதற்கான வெகுஜனப் போராட்டத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். ஆனால் தேர்தலிற் போட்டியிட்டு பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் அத்திவாரமாய் இருக்கும் இலங்கை அரசியலமைப்பிற்கு விசுவாசமாகச் சத்தியப் பிரமாணம் செய்யும் இவர்கள் என்றைக்கும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்ய இயலாது. பச்சையாகக் கூறுவதாயின் இவர்கள் இன்று அரசியல் விபச்சாரமே செய்து கொண்டிருக்கிறார்கள்.

மலையகத்தைப் பொறுத்தவரை தானைத் தலைவன் தொண்டமானே மலையக மக்களுக்குத் துரோகம் செய்வதில் தொடர்ந்தும் முன்னணி வகிக்கிறார். சிறுபான்மைத் தேசிய இனங்களை செடி, கொடி, கள்ளத்தோணி என்றெல்லாம் எவ்வளவுக்கு எவ்வளவு சிறுமைப்படுத்த முடியுமோ அவ்வளவும் செய்த ஜனாதிபதியுடன் மீண்டும் கைகோர்த்துக் கொண்டுள்ளார். சுமார் 17 வருடங்கள் அமைச்சராக இருக்கும் தொண்டமான் மலையக மக்களுக்குச் செய்த நன்மைகளைவிட தனக்கும் தனது உறவினர்களுக்கும் கட்சிக்கும் செய்துகொண்ட நன்மைகள் அதிகம். சுமார் 70 வருடங்களுக்கு முன்பு அம்மக்கள் வசித்த லயன்களிலே எதுவித மாற்றமும் இன்றி வசித்து வருகிறார்கள். 40 வருடங்களுக்கு முன் நிலைபெற்ற கல்விக் கூடங்களே தொடர்ந்து மாற்றமின்றி இயங்கிவருகின்றன. பல பாடசாலைகளில் 5ம் வகுப்பிற்கு மேல் இருப்பதில்லை. கடந்த 20 வருட காலப் பகுதியில் இலங்கைவாழ் ஏனைய மக்கள் பெற்றுக்கொண்ட சமூக பொருளாதார முன்னேற்றங்களோ தொழிற்சங்க உரிமைகளோகூட முழுமையாக மலையக மக்களுக்குக் கிட்டவில்லை. மலையக மக்களுடைய பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் சிங்களக் குடியேற்றத்தைக்கூடத் தடுத்து நிறுத்த இயலாதவர், இன்று அதே பேரினவாதக் கட்சியுடன் இணைந்து பொதுப் பட்டியலில் போட்டியிடுகின்றார். தோட்டங்களைத் தனியார் மயப்படுத்தி அம்மக்களின் எதிர்கால பொருளாதார சமூகநல வாழ்வுக்குச் சாவு மணியடித்த பேரினவாதிகளுக்குத் துணையாயிருந்த தொண்டா மலையக மக்களால் தூக்கி எறியப்படும் காலம் வந்தே தீரும். ஆனால் அதற்கான முற்போக்கு சக்திகள் மலையகத்தில் தற்போது பரவலாகச் செயற்படவில்லை. இந்நிலை தொடரும்வரை தொண்டாவுக்கு 'ஜே' என்பதுதான் மலையக மக்களின் விதியாக உள்ளது.

www.tamilarangam.net

முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக கருதப்படும் முஸ்லிம் கொங்கிரஸ் கடந்த காலங்களில் பல குத்துக்கரணங்களை அடித்து முஸ்லிம் மக்கள் மத்தியில் மட்டுமன்றித் தமிழ் மக்கள் மத்தியிலும் அவநம்பிக்கையைப் பெற்றுள்ளது. தமிழ் முஸ்லிம் மக்களுக்கு இடையேயான நிரந்தர உறவே சிங்கள பேரினவாதிகளிடம் இருந்து விடுதலை பெற அவசியம். ஆனால் மு.கொங்கிரஸ் முன்பின் முரணாகப் பேசுவதிலும் அறிக்கை வெளியிடுவதிலுமே காலத்தைக் கடத்துகிறது. இன்று, சு.க.தலைமையிலான பொ.ஐ.மு.யுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலிற் போட்டியிடுகிறது முஸ்லிம் கொங்கிரஸ்.

கிழக்கில் ஈபிஆர்எல்எஃப் காலத்தில் நிகழ்ந்த முஸ்லிம் மக்கள் மீதான படுகொலைகளையோ, வடபகுதியில் இருந்து முஸ்லிம் மக்கள் துரத்தப் பட்டபோதோ உறுதியான ஒரு அரசியல் நடவடிக்கை மூலம் அவற்றுக்கு எதிராகப் போராடாத முஸ்லிம் கொங்கிரஸ் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையிலான உறவைச் சீர்செய்யும் பணியில் தமிழ் இயக்கங்கள் போலவே எதுவும் உறுதியாகச் செய்யக்கூடிய நிலையில் இல்லை. முன்னைய தேர்தல்களிலும் பார்க்க முஸ்லிம் மக்களுக்கு அதிக முக்கியம் கொண்ட இந்தத் தேர்தலில் முஸ்லிம் கொங்கிரஸ் என்ன சாதிக்கப் போகிறது என்பது கேள்வியே.

1977க்குப் பின் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்தத் தேர்தலில் ஐதேக பலவீனமான நிலையிலேயே தேர்தலை எதிர்நோக்குகிறது. கட்சியின் முக்கிய பலவீனம் அதன் பலமற்ற தலைமை. ஜேஆர், பிரேமதாசாவுக்குப் பின்வந்த டிபி விஜேதுங்கா சுதந்திர இலங்கையின் வரலாற்றில் மிகப் பலவீனமான ஆட்சித் தலைவராக உள்ளார். ஏனைய இனங்கள் தொடர்பாக இவர் வெளியிட்டுவரும் பகிரங்க விசமப் பிரசாரங்கள் பலகாலமாக ஐதேகவிற்கு வாக்களித்துவந்த ஏனைய இனத்தவரது ஆதரவையும் இழக்க வைத்துள்ளது. இந்த வாக்குகள் ஏனைய (சுயேச்சைக்) குழுக்களுக்கோ எதிரணியினருக்கோ சென்றுவிட வாய்ப்புண்டு. கட்சிக்குள் பிரேமதாச அணியினர் ஓரங் கட்டப் பட்டமையும், காமினியும் ரொணி டிமெல்லும் மீண்டும் கட்சிக்குள் வந்தமையும் கட்சிக்குள் குழப்ப நிலையைத் தோற்றுவித்துள்ளது. இவற்றுடன் நாட்டில் தலைவிரித்தாடும் ஊழல், 89-91காலப் பகுதியில் காணாமற் போயும் கொலை செய்யப் பட்டும் போன 60,000 சிங்கள மக்கள், அண்மையிற் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் என்பனவும் ஆளும் கட்சியின் இறங்குதிசையைக் காட்டுகின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரை 17 வருடங்களின் பின்னர் அரச கதிரைகளைத் தொட்டுப் பார்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. பலரைக் கவர்ந்துள்ள சந்திரிகா எதிரணிக்குத் தலைமை தாங்குவதும் எதிர்க் கட்சிகளைப் பொறுத்தவரை சாதகமான அம்சங்கள். தாம் பதவிக்கு வந்தால் ஊழல் பேர்வழிகளைத் தண்டிப்பதாகவும், இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதாகவும் தொடர்ந்தும் திறந்த பொருளாதாரக் கொள்கைகளையே கடைப்பிடிக்க உள்ளதாகவும் முன்னணி அறிவித்துள்ளது. சு.க.யைப் பொறுத்தவரை சிறுபான்மை இனங்களின் மத்தியில் அது பாரிய ஆதரவைக் கொண்டிருக்கவில்லை (1982 ஜனாதிபதி தேர்தல் நீங்கலாக).

சுதந்திரக் கட்சியின் மத்திய குழு வேட்பாளர் பட்டியலைப் பார்த்தாலே இதைத் தெரிந்து கொள்ளலாம். இதொகாவுக்கு அடுத்த நிலையில் உள்ள மலையக மக்கள் முன்னணியுடன் உடன்பாடு காணத் தவறியமையும் மலையகத்தில் இக்கட்சி

www.tamilarangam.net

* தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றால் தீவுப் பகுதிகளின் நிர்வாகம் ஈபிடிபியிடம் இருந்து ஈபிஆர்எல்எஃப்பின் கைக்கு மாற்றப் படலாம் எனத் தெரியவருகிறது.

* தொண்டாவின் உட்கட்சி மோதலுக்குப் பலியான செல்லச்சாமியை ஐக்கிய தேசியக் கட்சியும் கைவிட்டுள்ளது. இது தொடர்பஏக விஜேதுங்கா எடுத்த கடைசி முயற்சியும் தோல்வியில் முடிந்துள்ளது.

* சுயாட்சி பற்றிப் பேசும் பைத்தியக்கார நடிகனென என்னைக் கூறுகிறார்கள் - ஐதேகவில் இருந்து சு.கட்சிக்குத் தாவிய முன்னாள் உபசபாநாயகர் காமினி பொன்சேகா

* தமிழ் மக்கள்மீது தமது அதிகாரத்தைச் செலுத்தவே சிங்களக் கட்சிகள் விரும்புகின்றன - காமினி பொன்சேகா

* புளொட் - கூட்டணி மோதலையும், ஈபிடிபி - ஈபிஆர்எல்எஃப் மோதலையும் அடுத்து சகல பிரிவினரையும் அழைத்து சமாதானமாக இருக்கும்படி டிபி.விஜேதுங்கா கேட்டுள்ளார்.

* தேர்தல் முடிந்தவுடன் ஊழல் பேர்வழிகள் நாட்டைவிட்டுத் தப்பாமல் கட்டுநாயகா விமான நிலையத்தை மூடுவோம் - பொதுஜன ஐக்கிய முன்னணி

* தேர்தலிற் பங்குகொள்வோர் காட்டிக் கொடுக்கும் இனத்துரோகிகள் - புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம்

* தேர்தல்கால சத்துமாத்தாக வீட்டுரிமைப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சிகள் மலையகத்தில் பரவலாக நிகழ்ந்துள்ளன.

சார்பாக தமிழர் எவரும் போட்டியிடாமையும் சிறுபான்மை மக்கள் தொடர்பாகக் கட்சி கொண்டுள்ள நிலைப்பாட்டைப் புரியப் போதுமானதாகும்.

தாங்கள் பதவிக்கு வந்தால் ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றிப் பாராளுமன்ற ஆட்சி முறையைக் கொண்டுவரப் போவதாக இரு பெரும் கட்சிகளுமே கூறி வருகின்றன. எனினும் பாராளுமன்ற ஆட்சியாயினும் சரி, ஜனாதிபதி ஆட்சியாக இருந்தால் என்ன தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை இவர்கள் வழங்கப் போவதில்லை. பௌத்த சிங்களப் பேரினவாதத்தை நிலைப்படுத்தும் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றப் போவதில்லை. தமிழர்களின் பிரச்சனைக்குச் சமாதானத் தீர்வு என்று இவர்கள் கூறுவது இவர்கள் மொழியில் இராணுவத் தீர்வே. எனவே சிறிலங்காத் தேர்தல்களிற் பங்குபற்றுவதோ வாக்களிப்பதோ ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்குப் பயனளிக்கப் போவதில்லை. தேர்தல்களிற் பங்குபற்றா விட்டாலும் மதில்மேற் பூனைகளாகத் தேர்தல் பற்றி எமக்கு அக்கறையில்லை, அது சிறிலங்காவிற் தானே நிகழ்கிறது என்று கூறுவதும் தம்மைத் தாமே ஏமாற்றுவதுடன், மக்களையும் ஏமாற்றும் முயற்சியாகும்.

இலங்கை பல்லின, பலமொழி, பலமத, பல்கலாசார நாடு என்பதையும், அங்கு வசிக்கும் அனைத்து இனங்களும் தம்மைத்தாமே ஆளும் தகுதி உடையவை (சுயநிர்ணய உரிமை உடையவை) என்பதையும் எப்போது அரசியலமைப்பு ரீதியாக இலங்கை ஆட்சிமுறை ஏற்றுக் கொள்கிறதோ அப்போது தேர்தலிற் பங்குபற்றுவதோ வாக்களிப்பதோ ஆரோக்கியமான அரசியற் பங்களிப்பாக இருக்கும்.

www.tamilarangam.net

# கவிஞன் கைப்பேனா

அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட
இலங்கைத் தமிழருக்காய்
பலர் கையில் நான் அழுதேன்.
என் கண்ணீரின் கருத்துகளை
காளையர் கருத்தெடுத்தனர்
மூத்தவரை மூலையில் போட்டு
துப்பாக்கியைத் தோழிலிட்டு
போர் என்று புறப்பட்டனர்.

சிரித்தேன், ஆனந்தக்கண்ணீரில் அழுதேன்.
பல காகிதங்கள் நனைந்தன.
மீண்டும் அழுதேன்.
தூக்கிய துப்பாக்கிகள்
தோழர்களைக் குறிபார்த்தபோது,
நெற்றியில் பொட்டு வைத்து
கம்பத்தில் தூக்கியபின்
என்னை எடுத்து அழடா
என்றார்கள்.

துரோகி என்று
ஒப்பாரி வைத்து அழுதேன்
என்வினை என்னைச் சுட்டது.

இன்றும் அழுகிறேன்
மொட்டாக இருந்த தமிழ்க் குடும்பங்கள்
இலவம்பஞ்சுபோல், உலகெங்கும்
பட்ட இடமெல்லாம் தொட்டு நிற்பதால்
தோட்டி வேலைக்குத் தோரணம் ஆனதால்.

எலும்புக்குத் தோல் போர்த்த
குழந்தைகள்.
பலாத்காரப் படுத்தப்பட்ட பாவையர்கள்.
துப்பாக்கிமுனையில் வாய்பேசாப் பூச்சிகளாய்
எம் பாலகர்கள்.
இரத்த சகதியிலே ஊன்றி
காலை எடுக்க முடியாது
எம்மினம்.
ஐயகோ!!!
நான்கூட இனி
அழ இயலாது - ஏனெனில்
துப்பாக்கிகள்
என்னை நோக்கி
சிரித்துவிடும்.

நக்கீரனார்

## இங்கே நிறுத்தவும்!

சரியான இடத்தில் வாகனங்களை நிறுத்தாமல், பிழையான முறையில் நிறுத்துவதற்குத் தண்டனையாகக் கணிசமான தொகை அறவிடப் படுகிறது. ஒஸ்லோவின் வீதிகளில் இவ்வாறு 'தண்டனை' பெறும் வாகனங்களின் எண்ணிக்கை மாதம் ஒன்றுக்குச் சராசரியாக 30,000.

கடந்த வருடத்தில் 3,30,000 வாகனத்தரிப்புத் தண்டனைகள் ஒஸ்லோவில் நிகழ்ந்துள்ளன. இது ஒரு மணி நேரத்தில் 37 தண்டனைகள் என்ற வீதத்தில் உள்ளது. கடந்த வருடம் இவ்வாறு விதிக்கப்பட்ட தண்டத் தொகை ஒன்பதேகால் கோடி. இந்தப் பணத்தில் பெரும்பகுதி, மேலதிகத் தரிப்பிடங்களை உருவாக்கவும், போக்குவரத்துப் பாதுகாப்புகளை உறுதிப் படுத்தவும் செலவிடப் படுகிறது.

- அவதானி -

www.tamilarangam.net


# அகதிகள் — மாறும் சட்டங்கள்

• ஜெயம்

1993, ஜனவரிக்கு முன்பாக அகதி அந்தஸ்த்துக்காக விண்ணப்பித்துக் கொண்ட குழந்தைகளுடனான குடும்பங்கள் எல்லாவற்றிற்கும் சுவீடனில் நிரந்தரமாகத் தங்குவதற்குரிய அனுமதியை மனிதாபிமான ரீதியில் வழங்குவது என்று சுவீடன் அரசு முடிவெடுத்துள்ளது. (1992, 1993ம் வருட இறுதியில் 18 வயதைப் பூர்த்தி செய்திருக்காத பிள்ளைகள் கொண்ட குடும்பங்களாக இருக்க வேண்டும்.)

சித்திரை மாத இரண்டாம் வாரத்தில் (14/04/94) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தின்படி, குறிப்பிட்ட காலப் பகுதியில் தங்கும் அனுமதி மறுக்கப்பட்டுத் தலைமறைவாக வாழ்பவர்களும், சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப் படுவதற்காகக் காத்திருப்பவர்களும் திரும்பவும் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளும் பட்சத்தில் சுவீடனில் வசிப்பதற்கான நிரந்தர அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்தத் தீர்மானத்தின் மூலம் சுமார் 20,000 பேர் (பெரும்பாலானவர்கள் பழைய யூகோஸ்லாவியாவின் கோசோவோ மாகாணத்தவர்) சுவீடனில் தங்கும் உரிமை பெறுவார்கள் எனக் கூறப்படுகிறது.

தற்போதுள்ள சுவீடனின் அரசாங்கம் பதவிக்கு வர முன்பு பாடசாலைக்குச் செல்லும் வயதிலுள்ள பிள்ளைகளுள்ள குடும்பத்தினர் அகதி அந்தஸ்த்துக்காக



www.tamilarangam.net

விண்ணப்பம் செய்து கொண்டு சுமார் 18 மாதகாலம் நாட்டிலிருக்கும் பட்சத்தில் மனிதாபிமான ரீதியில் நிரந்தரத் தங்கும் உரிமை பெறுவர் என்றிருந்த சட்டத்தை இவ்வரசு நீக்கியது. இதன் மூலம் இதுவரை சுமார் 30,000 பேர் சுவீடனில் குடியுரிமை மறுக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர். இன்றைய கூட்டரசிலுள்ள, அகதிகள் தங்கும் உரிமையைப் பற்றி முடிவு செய்யும் அமைச்சரவையை பெற்றிருக்கும் லிபரல் கட்சியினர் (FOLK PARTY) நாட்டின் எல்லைகளை அகதிகளுக்காகத் தாராளமாகத் திறந்து வைப்பதாகக் கூறிப் பதவிக்கு வந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. பதவிக்கு வந்ததும் சுவீடனில் அகதி அந்தஸ்த்துக்கான சட்டங்களை மேலும் இறுக்கப் படுத்திய அவர்களது கொள்கை பரவலாக எல்லோராலும் விமர்சிக்கப்பட்டு வந்தது. அதைப்பற்றி ஆராய்வதற்காக அரசால் நியமிக்கப்பட்ட குழுவொன்றும் 'சுவீடனில் அகதியாக ஏற்றுக் கொள்ளப்படுவது முன்னெப்போதையும் விடக்கடினமானது' என்ற தனது முடிவைச் சமீபத்தில் வெளியிட்டது.

இவ்வருடப் பிற்பகுதியில் நடக்கவிருக்கும் பாராளுமன்றத் தேர்தல்களைக் கணக்கிட்டுத்தான் இப்போதைய தீர்மானம் எடுக்கப்பட்டதா என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க இயலாது.

**சாள்ஸ்**

# மொழிக்காப்பு!

ஐரோப்பிய நாடுகளில் பிரஞ்சு மொழியின் மதிப்பும் தரமும் குறைந்து வருவதாகக்கருதி பிரான்சிய அரசு அண்மையில் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறது. அந்த நாட்டின் மேல் (செனட்) சபையில் மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழி சம்பந்தமான இந்த மசோதாவானது பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காகக் காத்திருக்கிறது.

இச் சட்டம் அமுலாக்கப்படும் பட்சத்தில் பிரான்சின் வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்கள், பொது அறிவித்தல்கள் போன்றவற்றில் அந்நியச் சொற்கள் இடம் பெறுவது சட்டவிரோதம் ஆக்கப்படும். அந்நாட்டு எல்லைக்குள் நடாத்தப்படும் கருத்தரங்குகள் பிரெஞ்சு மொழியிலேயே நடாத்தப்பட வேண்டும்; அல்லது அங்கு ஒரு பிரெஞ்சு மொழிபெயர்ப்பாளர் இருப்பது அவசியம்.

சட்டமீறுதலுக்கான தண்டனைத் தொகை சுமார் 2000டொலர்கள் வரை போகக்கூடும். சட்டமீறுதல்களைக் கண்காணிக்க முயலும் ஊழியர்களைத் தடுக்க முற்படுபவர்கள் சுமார் 6 மாதச் சிறைத் தண்டனை பெறுவர்.

சட்டத்திற்கு விதிவிலக்குப் பெற்றுள்ளவை பிரான்சிய ஸ்தாபனங்களின் சர்வதேச வியாபாரப் பிரிவுகள் மட்டுமே. அவர்களது வெளிநாட்டு வியாபாரத் தொடர்புகளை எண்ணியே இவ்விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிரபலத் தொலைக்காட்சிகளான "CNN", "MTV" மற்றும் சிறுவர், சிறுமியர்களைக் கவரும் CARTOON NETWORK" போன்றவற்றின் எதிர்காலம் பிரான்சில் என்னாகுமோ தெரியவில்லை. CD (COMPACT DISK) இன் பெயர் "DISQUE AUDIO-NUMERIQUE" என்றும் BULLDOZER "BOUTEUR" என்றும் சொல்லப்பட வேண்டும் என்று முடிவு செய்துவிட்டார்கள்.

www.tamilarangam.net

திருச்செல்வம் திலீபன்



## குழந்தைகள் துஸ்பிரயோகம்

'தந்தையார் தமது மகளுடன் உடலுறவு கொண்டார் அல்லது பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தினார்' இது போன்ற செய்திகளைத் தொலைக்காட்சி, பத்திரிகைகளில் ஐரோப்பாவில் வாழ்பவர்கள் கண்டிருக்கலாம். இத்தகைய நிகழ்வுகள் எமது நாட்டில் இல்லை என்று நோர்வேஜிய மக்களுடன் வாதாடிய தமிழர்களைப் பார்த்திருக்கிறேன். உண்மையிலேயே இவர்கள் எமது நாட்டைப் பற்றி அறியாதவர்கள் போலும்.

தந்தையுடன் ஓடிப்போன மகளின் கதைகளும் உண்டு. தந்தைக்குப் பயந்து மகளைக் கொண்டுபோய் ஒளிக்கும் தாய்மார்களும் உண்டு. ஒரு தாய் தனது தந்தையுடன் ஒரு கோவிலடியில் கதைத்த கதை இப்பவும் என் காதுகளில் கேட்கிறது. "மூத்தவள் குளிக்கப் போனா என்ர மனிசனும் அங்கை போய் நிண்டு அவள் குளிக்கிறதை ஒட்டுப் பார்க்கிறான் பாவி".

இப்படியான விடயங்கள் எமது நாட்டிலே மறைக்கப் படுகின்றன, அல்லது முலாம்பூசப் படுகின்றன. எமது நாட்டில் வளர்ந்தவர்களுக்கு வயது ஒரு 'லைசென்ஸ்'. வயதைத் தவிர வேறு எதுவும் வளராததால் தானோ என்னவோ வயதுக்கு மரியாதை கொடு என்கிறார்கள். இப்படியான நிகழ்வுகள் மறைக்கப் படுவதற்குக் காரணம் நாளை அந்தப் பிள்ளையின் வாழ்வு பாழாகி விடும், திருமணம் நடக்காது என்று கருதுவதுதான். ஆகவே அவளுக்கு எதிர் காலப் பாதுகாப்பு இருக்காது. அது

www.tamilarangam.net



மட்டுமல்ல தந்தையினுடைய 'பெயர்' பாதிக்கப் பட்டுவிடும்.

ஐரோப்பிய நாடுகளில் இப்படித் தந்தையால் பாதிக்கப் பட்டவள் மீண்டும் வாழலாம் என்ற நிலை இருப்பதால் பிரச்சனைகள் வெளிப்படையாகச் சமூகத்தின் பார்வைக்கு வருகிறது, விவாதத்திற்கு விடப்படுகிறது. இப்படியான பிரச்சனைகள் எமது நாடுகளில் தான் நடைபெறக் கூடாது. ஏனெனில் கலாச்சாரம் ஒரு புறம், நாம் என்றும் கூடி வாழ்பவர்கள். என்றும் வீட்டில் தாயோ, சகோதரங்களோ அன்றி பேரமக்களோ இருப்பார்கள். ஒரு தந்தையானவன் மகளைச் சந்திப்பதற்குச் சந்தர்ப்பமே குறைவு. அப்படியான இடங்களிலேயே இப்படி என்றால்? ஐரோப்பிய நாடுகள் போன்ற சமூக அமைப்பு ஏற்பட்டால்?

ஐரோப்பிய நாடுகளில் மதுபானம் பயன்படுத்தல் அதிகம். இதுவும் ஒரு காரணம். சமூக அமைப்பை ஒருவனது குடும்பம் பற்றி மற்றவன் அக்கறை எடுப்பதில்லை. தானுண்டு தன் குடும்பமுண்டு என்று இருந்துவிடுவான். வேலைப் பளுக்களும் இதற்கு ஒரு காரணம். ஆகவே தப்புத் தண்டா செய்பவர்களுக்கு வசதி ஏற்படுகிறது.

நானும் எனது நண்பர்களும் ஒருநாள்

www.tamilarangam.net

கதைத்துக் கொண்டிருந்தபோது ஒருவர் சொன்னார், அந்தக் கணவருக்கு மனைவியைவிட 25 வயது அதிகம் என. மற்றவர் சொன்னார் பெண்ணுக்குச் சரி அரைவாசி வயதுகூடிய குடும்பங்களும் உண்டு என. மூன்றாவது ஆள் கூறினார், இவற்றை எல்லாம் ஒரு சொல்லில் கூறுவது என்றால் **barnemisbruk** (குழந்தைகள் துஷ்பிரயோகம்) எனலாம் என்றார்.

குழந்தைகள் துஷ்பிரயோகம் எனக் கருதப்படும் தந்தை மகளுடனான தகாத உறவுகளோ அல்லது குழந்தைகளை வளர்ந்தவர்கள் காம இச்சைகட்குப் பயன்படுத்தல் போன்றவை எமது நாட்டில் இல்லை என்று மார்தட்டிச் சொல்வதற்கில்லை. இது உலகெங்கும் உள்ளதுதான். சூழ்நிலைகள், சமூக அமைப்புகள், மனநோய்கள் போன்ற பல காரணிகளைப் பொறுத்து நிகழும் வீதம் கூடலாம் அல்லது குறையலாம்.

ஐரோப்பிய நாடுகளில் விவாகரத்து அதிகமாதலால் பெண்பிள்ளை பாதி நாட்கள் தந்தையுடன் தனித்து வாழவேண்டிய நிலையும், தந்தை வேறு பெண்தொடர்பு அற்று இச்சையுடன் தனித்திருக்கும் நிலையும் உள்ளது. அது மட்டுமல்ல, ஆபாசப் பத்திரிகைகள், வீடியோக்கள் எங்கும் சாதாரணமாகக் கிடைக்கிறது. சந்தர்ப்பமும் வசதிகளும், தகாத உணர்வுகளும் மனிதனை மிருகமாக்கி விடுகிறது.

இப்படியான சம்பவங்கள் பெண் குழந்தைகளுக்கு மாத்திரமல்ல, ஆண் குழந்தைகளுக்கும் நடப்பன. இவை எங்கும், நாட்டுக்கு நாடு வேறு வடிவங்களில், வீட்டுக்கு வீடு வாசற்படி என்பதுபோல் அமைந்துள்ளன.

(வரும்)



## மூன்று கவிதைகள்

**1**

மழை வராதா
என்று
ஏங்கிய நாட்களுண்டு!
இப்போது -
எரிச்சலே வருகிறது
இப் -
பெருமழை கண்டு!

**II**

எங்களூரின்
அதிகாலைப் பொழுதில்..
தோள்மீது துப்பாக்கிகளை
சுமந்து செல்லும்
அவனில்.....
யேசுநாதர் ஞாபகம் வருகிறார்.

**III**

என் ஆசைகள் எல்லாம்
பிறக்கும்
என் குழந்தைகள் யாவும்
துப்பாக்கியுடனேயே பிறக்கட்டும்
என்பது.....

www.tamilarangam.net

● மஹறி




# உலகை ஈர்த்த உதைபந்தாட்டம்

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை உலகின் கவனம் அத்தனையையும் தன்பக்கம் ஈர்க்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிச் சுற்று இவ்வருடம் அமெரிக்காவில் நிகழ்ந்து முடிந்தது. உதைபந்தாட்டம் அதிக பிரபலம் ஆகாத நாடான அமெரிக்காவில் இப் போட்டிகள் நிகழ்ந்தாலும், போட்டிகள் அதேயளவு உற்சாகத்துடன் நிகழ்ந்ததுடன் கணிசமான பார்வையாளர்கள் போட்டியை நேரிற் சென்றும் கண்டு களித்தனர்.

1938க்குப் பின் முதற் தடவையாக இறுதிச் சுற்றில் பங்குபெற நோர்வே தகுதியானமையால் இவ்வருடம் நோர்வேயில் உதைபந்தாட்டம் உற்சாகத்துடன் பார்க்கப்பட்டது. ஆனால் குழுநிலைத் தெரிவில் எல்லாக் குழுக்களும் (இத்தாலி, மெக்சிக்கோ, அயர்லாந்து) நோர்வேயின் அதேயளவு புள்ளிகளைப் பெற்றதுடன், அதிக கோல்கள் பெற்ற அடிப்படையில் ஏனைய நாடுகள் அடுத்த சுற்றுக்குச் செல்ல, நோர்வே பின்தங்கிவிட்டது. இதனால் உலகின் தலைசிறந்த கோல்காப்பாளரான நோர்வேயின் ஏறிக் தூர்ஸ்ற்வெத் (Erik Thorstvedt) தனது ஆட்டத் திறமையைக் காட்ட முடியாமற் போய்விட்டது.

## PULJE A

| | |
|---|---|
| **USA-Sveits** | **1-1** |
| **Colombia-Romania** | **1-3** |
| **Romania-Sveits** | **1-4** |
| **USA-Colombia** | **2-1** |
| **USA-Romania** | **0-1** |
| **Sveits-Colombia** | **0-2** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Romania | 3 | 2 | 0 | 1 | 5-5 | 6 |
| Sveits | 3 | 1 | 1 | 1 | 5-4 | 4 |
| USA | 3 | 1 | 1 | 1 | 3-3 | 4 |
| Colombia | 3 | 1 | 0 | 2 | 4-5 | 3 |

## PULJE B

| | |
|---|---|
| **Kamerun-Sverige** | **2-2** |
| **Brasil-Russland** | **2-0** |
| **Brasil-Kamerun** | **3-0** |
| **Sverige-Russland** | **3-1** |
| **Russland-Kamerun** | **6-1** |
| **Brasil-Sverige** | **1-1** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Brasil | 3 | 2 | 1 | 0 | 6-1 | 7 |
| Sverige | 3 | 1 | 2 | 0 | 6-4 | 5 |
| Russland | 3 | 1 | 0 | 2 | 7-6 | 3 |
| Kamerun | 3 | 0 | 1 | 2 | 3-11 | 1 |

## PULJE C

| | |
|---|---|
| **Tyskland-Bolivia** | **1-0** |
| **Spania-Sør-Korea** | **2-2** |
| **Tyskland-Spania** | **1-1** |
| **Sør-Korea-Bolivia** | **0-0** |
| **Bolivia-Spania** | **1-3** |
| **Tyskland-Sør-Korea** | **3-2** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Tyskland | 3 | 2 | 1 | 0 | 5-3 | 7 |
| Spania | 3 | 1 | 2 | 0 | 6-4 | 5 |
| Sør-Korea | 3 | 0 | 2 | 1 | 4-5 | 2 |
| Bolivia | 3 | 0 | 1 | 2 | 1-4 | 1 |

www.tamilarangam.net

பல எதிர்பாராத முடிவுகளுடன் போட்டிகள் நிகழ்ந்தன. பலராலும் இறுதிப் போட்டிவரை தப்பிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட ஜேர்மனி, ஆர்ஜென்டீனா என்பன இடையிலேயே தோல்வியடைய நேர்ந்ததும் அதிகம் எதிர்பார்க்கப்படாத சுவீடன் மூன்றாம் இடம்வரை வந்ததும் குறிப்பிடத்தக்க அம்சங்கள்.

உலகில் உதைபந்தாட்ட வரலாற்றில் மிகச் சிறந்த வீரர் எனக் கணிக்கப்படும் பிரேசில் வீரரான பிலே 1970ல் பிரேசிலுக்கு உலகக் கிண்ணத்தை வாங்கித் தந்ததுடன் உதைபந்தாட்டத்தில் இருந்து ஓய்வு பெற்றார். அதன்பின் தற்போதே பிரேசில் கிண்ணத்தை வென்றிருக்கிறது. இம்முறை உலக ரசிகர்கள் பலரது அபிமானத்துக்குரியவரும், கடந்த வருடம் உலகின் இரண்டாவது தலைசிறந்த வீரர் எனக் கணிக்கப் பட்டவருமான றொமாறியோ இந்த வெற்றியில் முக்கிய பங்கு வகித்தார். நான்கு தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்ற ஒரே நாடாக பிரேசிலே திகழ்கிறது. உதைபந்தாட்டம் வாழ்வின் ஒரு அம்சம் என்று குறிப்பிடத் தக்களவு தென்னமெரிக்க நாடுகளிற் பிரபலமாக உள்ளது. இதுவரை தென்னமெரிக்க நாடுகள் எட்டுத் தடவை (பிரேசில்: 4, உருகுவே, ஆர்ஜென்டீனா: 2) உலகக் கிண்ணத்தை வென்றுள்ளன. ஏழு தடவைகள் ஐரோப்பிய நாடுகள் (ஜேர்மனி, இத்தாலி: 3, இங்கிலாந்து: 1)



வென்றுள்ளன. ஏனைய கண்டங்கள் ஒரு தடவையும் வெல்ல முடிந்ததில்லை.

பலர் எதிர்பாராத விதமாக இம்முறை ஆசிய நாடுகளான சவுதியும், தென் கொரியாவும் தமது முதற் சுற்றுப் போட்டிகளில் சில எதிர்பாராத முடிவுகளைக் காட்டின. இவ்வாறே உலகின் தலைசிறந்த வீரர்கள் சிலரைக் கொண்ட நைஜீரியாவும் சில சிறப்பான ஆட்டங்களைக் காட்டியது.

இந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் புகழ்பெற்ற ஆர்ஜென்டீன வீரரான மரடோனா போதைப்பொருள் பாவித்தார் என்று குற்றம் சாட்டப் பட்டதும், அமெரிக்காவுடனான போட்டியில் தவறுதலாகத் தனது குழுவுக்கு எதிராக கோல் போட்டார் என்ற காரணத்துக்காகக் கொலம்பிய வீரர் ஒருவர் தனது நாடு திரும்பிய உடன் சுடப்பட்டமையும் கறுப்புப் புள்ளிகளாக நிலைத்து நிற்கும்.

## PULJE D

| | |
|---|---|
| **Argentina-Hellas** | **4-0** |
| **Nigeria-Bulgaria** | **3-0** |
| **Argentina-Nigeria** | **2-1** |
| **Bulgaria-Hellas** | **4-0** |
| **Hellas-Nigeria** | **0-2** |
| **Argentina-Bulgaria** | **0-2** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Nigeria | 3 | 2 | 0 | 1 | 6- 2 | 6 |
| Bulgaria | 3 | 2 | 0 | 1 | 6- 3 | 6 |
| Argentina | 3 | 2 | 0 | 1 | 6- 3 | 6 |
| Hellas | 3 | 0 | 0 | 3 | 0-10 | 0 |

## PULJE E

| | |
|---|---|
| **Italia-Irland** | **0-1** |
| **Norge-Mexico** | **1-0** |
| **Norge-Italia** | **0-1** |
| **Irland-Mexico** | **1-2** |
| **Irland–Norge** | **0-0** |
| **Italia-Mexico** | **1-1** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Mexico | 3 | 1 | 1 | 1 | 3-3 | 4 |
| Irland | 3 | 1 | 1 | 1 | 2-2 | 4 |
| Italia | 3 | 1 | 1 | 1 | 2-2 | 4 |
| Norge | 3 | 1 | 1 | 1 | 1-1 | 4 |

## PULJE F

| | |
|---|---|
| **Belgia-Marokko** | **1-0** |
| **Nederland-Saudi-Arabia** | **2-1** |
| **Belgia-Nederland** | **1-0** |
| **Saudi-Arabia-Marokko** | **2-1** |
| **Marokko-Nederland** | **1-2** |
| **Belgia-Saudi-Arabia** | **0-1** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Nederland | 3 | 2 | 0 | 1 | 4-3 | 6 |
| Saudi-Arabia | 3 | 2 | 0 | 1 | 4-3 | 6 |
| Belgia | 3 | 2 | 0 | 1 | 2-1 | 6 |
| Marokko | 3 | 0 | 0 | 3 | 2-5 | 0 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# FOTBALL-VM 94

## VEIEN TIL VM-FINALEN

**05.07 kl. 22.30 New York**

| | | |
|---|---|---|
| MEXICO | e.e.o. | (1) 2 |
| BULGARIA | str. | (1) 4 |

**02.07 kl. 19.00 Chicago**

| | |
|---|---|
| TYSKLAND | 3 |
| BELGIA | 2 |

**05.07 kl. 19.00 Boston**

| | | |
|---|---|---|
| NIGERIA | | 1 |
| ITALIA | e.e.o. | 2 |

**02.07 kl. 22.30 Washington**

| | |
|---|---|
| SPANIA | 3 |
| SVEITS | 0 |

**03.07 kl. 22.30 Los Angeles**

| | |
|---|---|
| ROMANIA | 3 |
| ARGENTINA | 2 |

**03.07 kl. 19.00 Dallas**

| | |
|---|---|
| SAUDI-ARABIA | 1 |
| SVERIGE | 3 |

**04.07 kl. 18.00 Orlando**

| | |
|---|---|
| NEDERLAND | 2 |
| IRLAND | 0 |

**04.07 kl. 21.30 San Francisco**

| | |
|---|---|
| BRASIL | 1 |
| USA | 0 |

**10.07 kl. 18.00 New York**

| | |
|---|---|
| BULGARIA | 2 |
| TYSKLAND | 1 |

**09.07 kl. 18.00 Boston**

| | |
|---|---|
| ITALIA | 2 |
| SPANIA | 1 |

**10.07 kl. 21.30 San Francisco**

| | | |
|---|---|---|
| ROMANIA | e.e.o. | (2) 6 |
| SVERIGE | str. | (2) 7 |

**09.07 kl. 21.30 Dallas**

| | |
|---|---|
| NEDERLAND | 2 |
| BRASIL | 3 |

**13.07 kl. 22.00 New York**

| | |
|---|---|
| BULGARIA | 1 |
| ITALIA | 2 |




**13.07 kl. 01.30* Los Angeles**

| | |
|---|---|
| SVERIGE | 0 |
| BRASIL | 1 |

**17.07 kl. 21.30 Los Angeles**

**FINALE**

| | |
|---|---|
| ITALIA | 2 |
| BRASIL | 3 |

**16.07 kl. 21.30 Los Angeles**

**BRONSEFINALE**

| | |
|---|---|
| BULGARIA | 0 |
| SVERIGE | 4 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐரோப்பியக் கிண்ணத்தைச் சுவீகரித்த டென்மார்க், 1966ல் உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்த இங்கிலாந்து, புகழ்பெற்ற பிரான்ஸ் அணி என்பன இம்முறை இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகவில்லை. அடுத்த போட்டிகளுக்கு இவர்கள் இன்னும் நான்கு வருடங்கள் காத்திருக்க வேண்டும். அப்போது மேலும் பல புதிய முகங்கள் இந்தப் போட்டியிற் பங்கேற்கலாம்.

இம்முறை இறுதி ஆட்டம்வரை வந்த இத்தாலி இறுதி ஆட்டத்தில் தனது தற்காப்பு ஆட்டத்தால் பிரேசிலை கோல் போடாமற் காப்பாற்றியது. எனினும் பனால்டி முறையில் பிரபல வீரர் பக்கியோ (Baggio) வெளியே பந்தை அடிக்க அது பிரேசிலுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது. வறுமை, ஊழல் என்பவற்றுக்கு மத்தியில் இந்த வெற்றியை பிரேசில் ஈட்டியிருக்கிறது. பல ஆர்ப்பாட்டங்களுடன் வந்த அணிகள் பல மண்ணைக் கவ்வியிருக்கின்றன. அடுத்த முறை என்ன நிகழப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## ஆத்திரம் தீர்த்த அலை

● முகமட் அபார்

கடலலைகள் பொங்கி எழுந்து
தலையால் அடித்துக்கொண்டன தரையில்.

நண்டுகளும், ஊரிகளும்
தலைவேறாய்,
கால்வேறாய்
இந்தக்காலத்து
மனிதப் பிணத்தைப்போல் கிடந்தது.

ஊரெல்லாம் பயங்கரம்
உயிரெல்லாம் ஒரே அடக்கம்
கடலலைகள் -
பொங்கி, பொங்கிச் சீறியது.

நமது பட்டாளங்களைப் போல்
கொம்புகளை நீட்டிக் கொண்டு
தேசத்தை எட்டிப் பார்த்தன,
இரண்டு கடல் உயிரினங்கள்.

நேற்று -
முட்டையிட்டுச் சென்ற
கடலாமையின் முட்டைகளை
சுறாவும்,
திருக்கையும்,
கொட்டைப் பாக்கைப்போல்
பிடித்துப் பிடித்து
அங்குமிங்கும் எறிந்தன.

என் -
காதலியின் அலறல்
கடலலையோடு சேர்ந்து
அடிக்கடி என்னை அரட்டியது.

அழிவு அழிவு என
கத்தித் திரிந்த
ஊர்க் காகங்களோடு சேர்ந்து
நானும் கத்திக்கொண்டேன்.

www.tamilarangam.net

# சுவடுகள்

ஜனநாயகம், சோசலிசம், குடியரசு போன்ற முத்திரைகளைத் தன்னில் குத்தி வைத்திருக்கும் சிறிலங்கா; ஓர் ஜனநாயக வெளிப்பாடு எனத் தான் கருதும் பத்தாவது பாராளுமன்றத் தேர்தலை ஆவணி 16ல் நடத்தத் திட்டமிட்டுள்ளது. அடிப்படை உரிமைகளில் ஒன்றான வாக்களிக்கும் உரிமையை, வடக்கு கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் பயன்படுத்தக்கூடிய நிலையும், தமிழ்ப் பகுதிகளில் தேர்தல் நடத்தக்கூடிய நிலையும் இல்லை என்பதை நன்குணர்ந்தும் பேரினவாத அரசு தேர்தலை நடத்துகிறது.

இத் தேர்தலானது சிறுபான்மை மக்களின் பிரச்சனையைத் தீர்க்கும் தேர்தல் அல்ல. பெரும்பான்மை மக்களின் பிரச்சனையைத் தீர்க்கும் தேர்தலும் அல்ல. பெரும்பான்மைக் கட்சிகளுக்குள் இருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க நடத்தப்படும் தேர்தல் என்பதே வெளிப்படையான உண்மையாகும். ஐக்கிய தேசியக் கட்சி தனட கட்சியை மீள்புனரமைப்புச் செயவதிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினை உள்ளடக்கிய பொதுஜன ஐக்கிய முன்னணி பதினேழு வருட அரசியற் தோல்விக்குப் பின், தமது அரசியல் எதிர்காலத்தைத் தேடிக் கொள்வதிலுமே குறியாக உள்ளன. இந்த உண்மையை உணர்ந்துகொள்ளாதவர்கள்போல், தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் தேர்தல் அரங்கை முதன்மைப் படுத்துபவர்கள்போல கோமாளி வேடம் கட்டி மேடையேறியுள்ளனர்.

இலங்கையின் இதயநோயாகிவிட்ட இனப்பிரச்சனைக்குரிய தீர்வுகளைக் குறைந்தபட்சம் தேர்தற் காலங்களிலாவது முன்வைக்க முடியாத பேரினவாதக் கட்சிகள் பங்குகொள்ளும் தேர்தலில் தமிழ்க் கட்சிகள், குழுக்கள் பங்குகொள்வதும், அவர்களுடன் இரகசிய உடன்படிக்கை செய்துகொள்வதும், "இலங்கையில் இனப்பிரச்சனையே இல்லை" என்ற டி.பி.விஜேதுங்காவின் வாக்குக்கு வாக்களிப்பது போன்ற செயலேயாகும். பாராளுமன்ற நாற்காலியைப் பிடிக்கும் விளையாட்டில் முன்னாள் வீரர்களான தமிழர் விடுதலைக் கூட்டணி, இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்காக இந்திய இராணுவத்தைத் தாமே வரவழைத்தோம் என்று மார்தட்டிக் கொள்ளும் அதே கையால்; இந்திய இராணுவத்தால் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கும் இழப்புகளுக்கும் தாங்களே காரணம் என ஏற்றுக்கொள்ள வேண்டும். "சோறா சுதந்திரமா?" என எழுபத்தியேழுகளில் தமிழ் மக்களைப் பார்த்துக் கேட்ட கூட்டணியினரிடம் "துரோகமா தியாகமா" என மக்கள் தற்போது கேட்கிறார்கள்.

www.tamilarangam.net

இனப்பிரச்சனையை அரசியல் வியாபாரம் போல் கருதுவதால் இன்றுவரை தத்தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் எந்தப் பேரினவாதக் கட்சியும் இனப் பிரச்சனைக்குத் தாங்கள் எண்ணும் தீர்வுகளை முன்வைக்கவில்லை. இப்படியிருந்தும் ஏனைய தமிழ்க் குழுக்கள் அவர்களைச் சுற்றி வட்டமடிப்பது, இனப்பிரச்சனை தொடர்பாக அவர்களின் நிலைப்பாடு எத்தகையது என்பதைக் காட்டுகிறது. இனப்பிரச்சனை மூலம் அரசியல் லாபம் தேடலையே சிங்களக் கட்சிகளும் தமிழ்க் குழுக்களும் தற்போது செய்து வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியானது இனப்பிரச்சனை தொடர்பான தனது அறிக்கையில் "சாத்தியமானால் பேச்சுவார்த்தை அல்லது இராணுவ நடவடிக்கை" என்று, ஜேஆரின் "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்ற கூற்றுக்கு மீள்வடிவம் கொடுத்துள்ளது. விடுதலைப் புலிகளோ தேர்தல் முடியும்வரை பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை எனக் கூறித் தேர்தல்களைப் பகிஷ்கரித்துள்ளார்கள். இருப்பினும் விடுதலைப் புலிகளின் பின்பலத்துடனும், அனுசரணையுடனும் சிலர் தேர்தல்களிற் குதித்துள்ளதாக அறியமுடிகிறது.

தேர்தல் அறிவிப்பின் முன், இனப்பிரச்சனை தொடர்பாகத் தீர்வுத் திட்டம் ஒன்றை இணைந்து தயாரித்த தொண்டமான் - அஸ்ரப் போன்றவர்கள் தங்கள் தீர்வுத் திட்டம் தொடர்பாக பேரினவாதக் கட்சிகளின் நிலைப்பாடுகளை அறிந்துகொள்ளாமலேயே, தேர்தலிற் தொண்டமான் ஐதேகவுடனும், அஸ்ரப் பொதுஜன ஐக்கிய முன்னணியுடனும் பிரிந்துநின்று செயற்படுகிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை இனப்பிரச்சனை என்பது இரண்டாந்தரப் பிரச்சனைதான் என்பதையே இது காட்டுகிறது. தமிழ் முஸ்லிம் மலையக ம்களின் பிரச்சனைகளைத் துண்டுதுண்டாக நின்று போராடி வென்றுவிட முடியாது என்பதை இவர்கள் இன்னும் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை.

தமிழ் முஸ்லிம் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற முற்றுமுழுதான கோரிக்கை முன்னெடுப்புச் செய்யப்படாத நிலையில், அதனைப் பேரினவாதக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளாத நிலையில், சிறிலங்காப் பாராளுமன்றத் தேர்தலிற் கலந்துகொள்ளும் தமிழ் முஸ்லிம் வேட்பாளர்களும் வாக்காளர்களும் தமது வாக்குரிமையைத் துஸ்பிரயோகம் செய்யப் போகின்றவர்களாகவே கருதப்பட வேண்டும்.

சுவடுகள் 57,
வைகாசி94
(ஆடி இறுதியில் வெளியாகிறது)

www.tamilarangam.net

## ஆட்கடத்தலும் தொடர்புச் சாதனங்களும்

**சி**ல காலங்களுக்கு முன்னர் நோர்வேக்குள் (தமிழ் அகதிகளான) ஆட்களைக் கடத்திக் கொண்டுவந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒரு தமிழ் இளைஞர் (நெதர்லாந்துப் பாஸ்போட்டைக் கொண்டவர்) கைது செய்யப் பட்டதுடன், அண்மையில் அவர்மீது வழக்கும் தொடரப் பட்டது. இதுவே நோர்வேயின் மிகப்பெரிய ஆட்கடத்தல் வழக்கு என தொடர்புச் சாதனங்கள் சில வர்ணித்தன. கைது செய்யப் பட்டவர் தனது சொந்த விருப்பில் அல்லாமல், புலிகளின் நிர்ப்பந்தத்தாலேயே இந்த 'ஆட்கடத்தலி'ல் ஈடுபட்டதாகத் தனது வாக்குமூலத்தில் கூறியதாகவும் செய்திகள் வெளிவந்தன.

நீண்ட காலமாகவே நோர்வேஜியப் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் 'ஆட்கடத்தல்' (Menneskesmuggling) என்ற சொல்லை அதிகம் பாவிப்பதுடன், இவ்வாறு செய்வது சட்டவிரோதமானது என்ற அளவுடனேயே இந்தப் பிரச்சனையைப் பார்க்கின்றன. இனப்பிரச்சனை தொடரும் சூழ்நிலையில் உயிர்தப்பி ஓடிவரும் ஒரு அகதிக்கு இலகுவில் இந்த நாட்டுக்குள் புகுந்துவிடும் வசதி இல்லை என்பதையும், அந்த அகதி அரசியல் தஞ்சம் கோருவதற்கான உரிமை உடையவர் என்பதையும் இந்தத் தொடர்புச் சாதனங்கள் மறந்துவிடுவது கவலைக்குரியது.

'ஆட்கடத்தல்' என்பது நோர்வேஜியச் சட்டத்திற்கு மாறாக இருப்பினும், நேர்மையான வழிகளில் ஒரு அகதி இந்நாட்டுக்குள் வர வழி இல்லாதபோது என்னதான் செய்வது? தொடரும் இன அழிவுக்கு மத்தியில், உயிர்தப்பி வருவோரை மனிதாபிமானத்துடன் அணுகவேண்டியது நோர்வே அரசின் கடமையாகிறது. தொடர்புச் சாதனங்களும் இந்த வழியிலேயே பிரச்சனையை அணுகவேண்டும்.

அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்தப் பல புதிய வழிகளைக் கண்டுபிடிப்பதையும், அகதிகளைக் குற்றவாளிகள்போல் நடத்துவதையும் நிறுத்திவிட்டு, அகதிகள் வரக் காரணமான உள்நாட்டு யுத்தங்களையும், வறுமைகளையும் நிறுத்த ஆக்கபூர்வமான வழிகளில் உழைக்க வேண்டியதே நோர்வேயும் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் செய்யவேண்டிய முக்கிய பணியாகும்.

## வாக்காளர்கள்!

*நோர்வே, ஐரோப்பிய சமூகத்துடன் இணைவதா இல்லையா என்பது பற்றிய பொதுசன வாக்கெடுப்பு நவம்பர் இறுதியில் நிகழவுள்ளது. இதில் 32லட்சத்து 60ஆயிரம் வாக்காளர்கள் தமது எண்ணங்களைத் தெரிவிப்பார்கள். முதல் தடவை 1972ல் இவ்வாறான வாக்கெடுப்பு நிகழ்ந்தபோது ஏறத்தாழ இதில் பாதிப் பேர் வாக்குரிமை பெற்றிருக்கவில்லை. தற்போதைய வாக்காளர் தொகையில் 19 வீதமானோர் 67வயதுக்கு மேற்பட்டோராவர் (ஓய்வூதியம் பெறுவோர்).*

*அனந்து*

## வித்யாசம்

தமிழகத்தில் இருந்து வெளிவரும் புதிய காலாண்டிதழ். தொடர்புகள்: நாகார்ஜுனன்,/ 30A, நாட்டு சுப்பராய தெரு,/ சென்னை 600 004.
விற்பனை: காவ்யா,/16 17E Cross,/ Indira Nagar II Stage,/ Bangalore 560038.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓசைக்காக எழுதப்பட்ட இந்தக் கட்டுரை, தவிர்க்கமுடியாத சில காரணங்களால் சுவடுகளில் பிரசுரமாகிறது. இதைப் பிரசுரிக்க அனுமதித்த ஓசைக்கும், க.ஆதவனுக்கும் நன்றிகள்.

# ஆணிவேர் அறுந்த நான்

## சோலைக்கிளியின் கவிதைகள் பற்றிய குறிப்புகள்

க. ஆதவன்

நான் விமர்சனங்களை விடப் படைப்புகளையே அதிகம் விரும்புபவன். படைப்புகளைவிட விமர்சனங்கள் கூடிவிட்டால் பல தீமைகள் உண்டு. தேவையில்லாத கதைகள் கதைக்க வேண்டிவரும். அத்துடன் இப்போதுள்ள சூழல் விமர்சனங்களுக்குரிய ஆரோக்கியமான சூழலோ என்றும் தெரியவில்லை. ஜனநாயகமான கலந்துரையாடலை வர வரத் தமிழ்ச் சமூகம் இழந்து கொண்டிருக்கிறது. நான் 'நாய்' என்று சொன்னால் மற்றவர்களுக்குப் 'பூனை' என்றே கேட்கிறது. அதுமட்டுமல்லாமல் அவர்கள் 'பூனை'யின் நிறம், குணம் என்பது பற்றியெல்லாம் சொல்லி என்னைப் 'பூனை'க் கட்சிக் காரன் முத்திரையும் குத்திவிடுவார்கள். இந்தச் சூழ்நிலையில் 'ஓசை'யினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, சோலைக்கிளியின் 'ஆணிவேர் அறுந்த நான்' என்ற நூல் பற்றி எனக்குப் பட்டதைச் சொல்ல முற்படுகிறேன். படைப்பாளியான சோலைக்கிளியும் வாசகர்களும் பயன் பெறுவார்களாயின் நான் மகிழ்வுறுவேன்.

'கவியரங்கக்' கவிதைகளை, 'கவிதா நிகழ்வு' என்ற பரிமாணத்திற்கு 1981 அளவில் நு∴மானும், நானும், சேரனும் நகர்த்தினோம். புதுக்கவிதைக்கு உரிய பொருத்தமான நடப்பாய் 'கவிதா நிகழ்வு' அமைகிறது. புதுக்கவிதைக்குப் படிமம் எனும் அகக்காட்சி முக்கியமானதாய் இருக்கிறது. இதனைப் புறத்திலும் கொஞ்சமாய் நிகழ்த்திக் காட்டினால் என்ன? என்பதன் விளைவே கவிதா நிகழ்வு. 'சோலைக்கிளி'யின் கவிதைகளிலுள்ள படிமங்கள், கவிதையை இன்னோர் பரிமாணத்திற்கு இட்டுச் செல்கின்றன. இவரது கவிதைகளை 'கவிதா நிகழ்வு' மூலம் நிகழ்த்திக் காட்டுவது சற்றுக் கடினமானதே! சிலவேளை 'கவிதா நிகழ்வு' பொருத்தமற்றதாய்ப் போய் இன்னோர் வடிவத்தை வேண்டியும் நிற்கலாம்.



Post modernism (தமிழில் <u>உத்தர நவீனத்துவம்</u> என்கிறார்கள். மொழிபெயர்ப்பு எனதல்ல.) பற்றிய நிறையக் கதையாடல்கள் இப்பொழுது தமிழ் இலக்கிய உலகில் பரவலாக நடக்கின்றன. structuralism (அமைப்பியல்) பற்றி நிறையக் கவிஞர் அக்கறைப் படுகிறார்கள். தமிழ் நாட்டுக் கவிஞர்கள் பலர் இவை பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் சோலைக்கிளியின் கவிதைகள் வருவது சந்தோஷமான விஷயம்.

உத்தர நவீனத்துவ வகைகளுக்குள் சோலைக்கிளியின் கவிதைகள் அடங்குகின்றன. குறிப்பாக surrealism (சர்ரியலிசம்) சார்ந்ததாகப் பல கவிதைகள் இருக்கின்றன. ஓவியத்தில் பலர் 'சர்ரியலிசத்தை' வெளிக் கொணர்ந்தாலும் தமிழ் இலக்கியத்தில் ஒன்று இரண்டு படைப்புகளிலேயே அவை

www.tamilarangam.net

வெளிவந்திருக்கின்றன. 1980களில் சண்முகம் சிவலிங்கத்தின் 'நண்டும் முள்முருக்கம் பூவும்' என்று ஒரு கவிதை சர்ரியலிசத்தின் அறிகுறிகளைக் கொண்டது என அப்போது பேசிக் கொண்டனர். பத்து வருடங்களுக்குப் பின்னர் சோலைக்கிளியின் இந்தத் தொகுப்பு சாரியலிசத்திக்கு ஒரு அழகான உதாரணமாகத் தெரிகிறது. சோலைக்கிளியைப் பிடித்து 'சர்ரியலிசம்' என்ற கூட்டுக்குள் அடைக்கின்ற நோக்கம் எனக்குச் சிறிதளவும் இல்லை. அது பேசட்டும்! பாடட்டும்.

* * * *

எமது sub consious - ஆழ் மனதில் பதிந்த காட்சிகளை புறத்தில் உருவகித்துப் பார்ப்பது என்பது சர்ரியலிசத்தின் அடிப்படை. புறக்காட்சி அகத்தே போய், அகக் காட்சியுடன் அதாவது எமது மனதிலுள்ள பல கூறுகளாகிய ஆத்மா(ego), இலட்சியம் (id), கற்பனை போன்றவற்றுடன் கலந்துவிட்டு மீண்டும் புறத்தே வருகையில் விபரீதமான காட்சியாய் ஆகின்றன. அவற்றை அப்படியே ஓவியத்தில் பதிவு செய்ய முற்பட்டார்கள், சர்ரியலிச ஓவியர்கள். (இதில் Salvador Dali என்பவர் முக்கியமான ஓவியர்) அவற்றை இலக்கியங்களிலும் கொண்டுவரப் பார்த்தார்கள்.

'கோடைப் பாடல்' என்ற கவிதையில் வரும் காட்சிகளைப் பாருங்கள். (பக்கம் 10)

"....*கக்கத்தில் சூரியன்*
*காலடியில் சூரியன்*
*தோள்களிலும் சூரியன்.....*
என்று ஆரம்பித்து
*....கூழ்!*
*மனிதக் கால்கள் அகப்பை!*
என்று போய்
*காகத்தைக் காணவில்லை*
*அது உருகி*
*தார் போல் வடிகிறது.*

என்று வருகிறது.

இங்கே அகக்காட்சியில் படிமங்கள் முட்டி மோதி, ஆழ்மனதில் பதிந்த விஷயமான தார் உருகுவதுடன் கலந்து புறக்காட்சியான காகம் தாராய் உருகியது என்று வந்து விட்டது.

Dali ஒரு படம் வரைந்தார். மேசையில் இருக்கும் மணிக்கூடு கரைந்து வழிவது போல, காலங் கரைகிறது என்பதற்கு அருமையான விளக்கந்தரும் ஓவியமாக அது அமைந்திருந்தது.

கோடையின் வெப்பந்தாங்க முடியாமல் சோலைக்கிளியின் காகம் தார் போல வடிகிறது.

காலத்தின் விரைவு தாங்க முடியாமல் Daliயின் மணிக்கூடும் கரைந்து மேசை விளிம்பினூடு வழியப் பார்க்கிறது.

சர்ரியலிசத்திற்கான சிறந்த உதாரணங்கள் இவை. இங்கே நிறைய உதாரணங்களை எடுத்துக் காட்ட முடியும்.

சோலைக்கிளியின் காற்றுக்கு அடிக்கடி பெருவிரல் காயம் ஏற்படுகிறது. காற்றும் நொண்டி நொண்டித்தான் நடக்கிறது.

கவிதை - நாய் நக்கியதெரு, பக்கம் 18
(பக்கம் 17 - நொண்டி வருகின்ற என் .....)

'.....*பெருவிரல் முறிந்து நொண்டித் திரியிது காற்றும்.....?*

இன்னோரிடத்தில்,
'*நெத்தலி மீன், பட்டம் விடுகிறது*'
என்கிறார்.

அழகான படங்கள். காற்றுக்குக் கால் வலிக்குமா? சிறிய நெத்தலி மீன் பட்டம் விடுமா?

"*தலையில் கறுப்பும்*
*புறங்காலில் வெள்ளையுமாய்*
*சித்திரம் கீறிய தோலுள்ள என் உயிர்*"
*(பக்கம் 26)*

உயிருக்கு வடிவம் உண்டா? உயிரைத் தெரியுமா? உயிரை யமன் எடுத்துக் கொண்டு போவானா? உயிர் எப்படி இருக்கும்? உயிருக்குப் பருமன்...... பாரம் உண்டா?

www.tamilarangam.net

அறிவியலில்....... விஞ்ஞான விளக்கத்தில் குழம்பிப் போகாதீர்கள். சோலைக்கிளியின் உயிர் நிறமுடையது. சித்திரம் கீறிய தோலுடையது.

வாழ்க்கையில் சில படங்கள், சித்திரங்கள் நினைவு வருகின்றன. ஒருவனைப் பார்த்து 'நீ விரும்பிய காட்சி ஒன்றைச் சொல்' என்றால் அவன் என்ன சொல்வான்? அவனது அகம் சாராத ஒரு காட்சியை அவனால் சொல்ல முடியாது. அவனைப் பாதித்த காட்சியைத் தான் சொல்ல முடியும். சரி, பாதித்த காட்சி புறத்தில் தெரியும் காட்சியுடன் ஒத்திருக்க வேணுமோ? ஒத்திருந்தால் அதை யதார்த்தம் என்கிறோம். தன்னைப் பாதித்த அகக் காட்சியுடன் புறத்தில் கலைஞன் பேசுகிறான். பேச வேண்டும். இதைத்தான் பல்வேறு வகைகளில் சோலைக்கிளி சொல்கிறார்.

படைப்பாளியின் வேலை என்ன? படைப்பது.

நுகர்வோனின் வேலை என்ன? நுகர்வது.

விமர்சகனின் வேலை என்ன? விமர்சிப்பது.

பிரச்சாரகர்த்தாவின் வேலை என்ன? பிரச்சாரம் செய்வது.

அவரவர் வேலை அவரவர்களுக்கு என்றாகிவிட்டது. இங்கே கலைஞனின் வேலை என்ன? இன்னும் ஏன் குழம்புகிறோம்?

எம்மிடமுள்ள ஆத்மா, இதயம், இலட்சியம் எல்லாவற்றையுமே... கவிதையில் காட்சியில் கரைப்போம், கரைத்தே விட்டோம் என்று முடிவாயிற்று. பிறகென்ன?

உவமைகள்... உருவகங்கள்..... எல்லாமே 'நவீன ஓவியமாய்' மாறும். வெவ்வேறு பரிமாணங்களில்..... வெவ்வேறு கூர்ப்புகளில் தொடங்கும். வரையறை இல்லாத வடிவங்களாய்... வடிவங்கள் இல்லாத வரையறைகளாய்... இனித் தமிழ்க் கவிதை வரத்தான் வேண்டும்.

சோலைக்கிளியின் கண்டு பிடிப்புகள், உதாரணங்களை யதார்த்தத்தின் மேல் ஏற்றும் நளினம் அற்புதமானது. காதறுந்த ஓவியன் 'வின்சென்ற் வான் கோவ்' தனது சொந்தப் படத்தை (self portrait) வரைகையில்கூட செம்மையாய்... உள்ளது உள்ளபடியே வரையவில்லை. அந்தப் படத்தில் கூட அவனது புறக்காட்சியில் தெரியாத ஒன்றை அகக்காட்சியில் கண்டு கொண்டு அதற்கு அர்த்தம் சொல்ல விழைந்திருக்கிறான்.

ஓவியனின் ஒவ்வோர் கீறலுக்கும் காட்சி உண்டு. அது போலவே 'சோலைக்கிளி'யின் எழுத்துக்கு ஒரு காட்சி என்னுள்ளே விரிவதை என்னால் தவிர்க்க முடியவில்லை.

என்னுள்ளே - பாரிய அரசியல் சம்பவங்களை ஞாபகப்படுத்திய கவிதைகள் இந்தத் தொகுப்பிலுள்ளன. 'கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்' என்பது போல் நான் பல காட்சிகளை இக்கவிதையினூடு காண்கிறேன்.

"அரை அங்குலமாய்...பூனைப் பூச்சியாய்

## மொஸ்கோவிலிருந்து நயினை குலம்

### எங்கள் சுதந்திரம்

அந்நியரை வெளியேற்றி
அருகு வீட்டாருடன்
அவசரத்தில் செய்யப்பட்ட
திருமணச் சடங்கு!
விவாகரத்து கேட்டு
வீதியில் இறங்கிவிட்டோம்
வீட்டினுள் இன்னமும்
கல்யாணப் பெண் -
கன்னி!

www.tamilarangam.net

நான்" என்ற கவிதை (பக்கம் 16) காதலை, அன்பை......... இயலாமையை எனக்குச் சொல்லித் தருகின்றன.

"பெட்டையாய்ப் பாடல்கள்" என்ற கவிதை (பக்கம் 14) பெண்ணிலை வாதிகளைக் குழப்பக் கூடியது.

சோலைக்கிளி ஒரு strong ஆன ஆண் மகனோ?

'இளந்தாரி வெயில்'

'பெட்டையாய்ப் பாடல்கள்'

சில கவிதைகளுக்கு அர்த்தம் புரிய வேண்டுமென்றால் பாலியல் விளக்கங்களும் சொல்ல வேண்டி இருக்கிறது. அதனால் என்ன?

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. சோலைக்கிளியின் காட்சிகள் விளங்குகின்றன. விளங்க வேண்டும். இந்தக் காட்சிகளையே புரிய முடியவில்லை என்றால்... அவர்களுக்கு எதுவுமே புரியாதுதான்.

'சகோதரியே!

யுத்த காலத்து விதவைப் பூவே!'

'என் இனத்துப் பேனையால் அழுதது'

என்பனவற்றை 'கவிதை' என்று சொல்ல முடியுமோ தெரியவில்லை. அந்தக் காலத்தில் செய்யப்பட்டது 'செய்யுள்' என்றார்கள். உள்ளத்தின் அடியில் இருந்து வராமல் பண்ண வேண்டும் என்று எண்ணினால்... அது துருத்திக் கொண்டு நிற்கும்.

'அன்னியப் பூனை' என்ற கவிதையையும் கவிதை என்று ஏனோ என்னால் சொல்ல முடியவில்லை. அது அரசியலை, போதனையை, புத்திமதியை வலியுறுத்துகிறது.

கவிதையின் முக்கிய பண்புகள் இவை தான் எனில் என்னை மன்னிக்க வேண்டும்.

இந்தத் தொகுதியில் எனக்குப் பிடித்த கவிதை

'குருட்டு வண்ணாத்தி மோதிய காலை' (பக்கம் 29)

படைப்பாளிக்குப் பிடிக்காத ஒரு சம்பவம் நடந்ததை அது சொல்கிறது.

சில மாதங்களுக்கு முன்னர் நண்பர் இளவாலை விஜயேந்திரன் தன் கவிதைளை அனுப்பி அபிப்பிராயம் கூறும்படி பணித்திருந்தார். விஜயேந்திரன் கவிதைகளில் உள்ள படிமங்கள் புறநிலை யதார்த்தம் சார்ந்தவை. அழகானவை. சோலைக்கிளியின் படிமங்கள் அகநிலை யதார்த்தம் சார்ந்தவை. ஆழமானவை.

ஈழத்துக் கவிதையில் சோலைக்கிளிக்கு ஒரு முக்கிய இடமுண்டு.

அது ஒரு திருப்பு முனையும் கூட.

அது தான் நவீனத்துவம்.

## நித்திரைச் சாமிகள்!

நோர்வேயில் கிட்டத்தட்ட நான்குலட்சம் நித்திரைப் பிரியர்கள் இருப்பதாகக் கணிப்பிடப் படுகிறது. நித்திரைச் சாமிகள் என்றவுடன் சோம்பேறிகள் என நினைத்துவிடாதீர்கள். இவர்களை 'பி'மனிதர்கள் என அழைப்பர். இவர்கள் நித்திரை செய்வது மிகக் குறைவு அல்லது நடு இரவுக்குப் பின்னும் நித்திரை வாராதவர்கள். இவர்கள் மறுநாள் நண்பகலுக்குப் பின்பே விழிப்பார்கள். இதனால் இவர்களுக்குப் பாடசாலையோ வேலையோ சிரமமான காரியம். இதில் மூன்றில் இரண்டு பகுதியினர் வழமையான 9மணி முதல் 4மணி வரையிலான வேலைகளைச் செய்ய முடியாதவர்கள். இவர்கள் பலர் கலைத் தொழில், பத்திரிகைத் துறை என்பவற்றை நாடுகின்றனர்.

ரூபன்

www.tamilarangam.net

# அவிவேகள்

## : அதிரடித் தகவல்கள்

இன்றைய தமிழ்த் திரைப்பட உலகின் முன்னணிக் கதாநாயகன் 'சுப்பர்ஸ்ரார்' ரஜினிகாந்த் அண்மையில் ஐரோப்பிய சுற்றுலா ஒன்று செய்திருந்தார். அதுவும் தமிழக அநாதைச் சிறுவர்களின் ஆதரவு நிதி சேகரிப்புக் கலை நிகழ்ச்சிகளுக்காக!

புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் நேற்றுவரை, இலங்கைக் கலைஞர்களுக்கு ஆதரவு கொடுக்கா விட்டாலும், தமிழகத் திரைப்படக் கலைஞர்களுக்கு நான்முந்தி நீ முந்தி என்று அமோக வரவேற்புக் கொடுத்து வந்துள்ளனர். காசுமாலை, மோதிரம், சங்கிலி, கைகுலுக்கக் காசு, பேட்டிக்குக் காசு என்று தமிழகக் கலைஞர்களும் ஐரோப்பாவில் அகதிகள் மாடாய் உழைத்த 'காசில் வளர்த்த கலை' அதிகம்.

ஆனால் இம்முறை, அதுவும் ஒரு 'சுப்பர்ஸ்ராரி'ன் நிகழ்ச்சிகள் ஈழத் தமிழர்களால் போதிய அளவில் வரவேற்பை, ஆதரவைப் பெறவில்லை. இதுபற்றி விசாரித்ததில் ஜேர்மனி, பிரான்ஸ்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லண்டனில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பெரும் தோல்வியைத் தந்ததாகவும், சுவிஸ் நாட்டிலோ நிலைமை மிக மோசமாகிப் போனதாகவும், ஏறத்தாழ முழு ஆசனங்களுமே காலியாக இருந்ததாகவும் அறியமுடிகிறது.

இதுபற்றித் தெரியவருவதாவது. ஈழப்படை என்ற முன்பின் அறிமுகம் இல்லாத பெயரில் வெளிவந்த துண்டுப் பிரசுரம் ரஜினியின் நிகழ்ச்சியைப் பகிஷ்கரிக்கக் கோரியது. தமிழ் மக்கள் தொடர்பாகப் பொறுப்பற்ற முறையில் (கொள்ளைகளில் ஈடுபடுவதாகவும், வன்முறைகளுக்கும் சட்ட ஒழுங்கு சீர்குலைவுக்குக் காரணம் எனவும்) பேசிவரும் தமிழகத்தின் 'புரட்சித் தலைவி' ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் தமிழ் மக்களது மனம் வேகவைத்துவிட்டன. கன்னட மாநிலத்தில் தமிழ் மக்கள்மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது, 'எனது படை கன்னடத் தமிழர்களைக் காப்பாற்ற ஒவ்வொரு (கன்னடத்) தமிழர் வீட்டு வாசலிலும் நிற்கும்' என்று வீரவசனம் பேசிய ரஜினி, ஈழத்திலும் தமிழகத்திலும் ஈழத்தமிழர்கள் துன்புற்றிருக்கையில் மௌனமாக இருந்ததும் இருப்பதும் ஈழத்தமிழர்களது மனம் நோகச் செய்த இன்னொரு அம்சம். (இவர் மட்டுமல்ல, தங்களைத் தமிழ்ப்பற்று உடையவர்களாகவும், நியாயவான்களாகவும் சித்தரிக்கும் பல தமிழ்த் திரைப்படக் கலைஞர்களும் மௌனமாகவே இருக்கின்றனர்.)

தமிழகத்தில் பெருமளவு தமிழீழ அகதிகள் ஒழுங்காகச் சாப்பிடவோ, போதிய வசதிகளோ இல்லாமல் இருப்பதுடன், அவர்கள் கிறிமினல்கள் போல நடத்தப் படுவதும், அகதிமுகாமைவிட்டு வெளியே செல்ல அனுமதி மறுக்கப்படுவதும் மேலும் திருப்தியை உண்டுபண்ணும் சம்பவங்கள். ஈழத்தில் ஈவிரக்கமற்ற கொலை வெறியுடன் அரசின் தாக்குதல்கள், பொருளாதாரத் தடை என்பன மக்களை வாட்டிவருகின்றன. இந்த நிலைகளை மாற்றவே போதிய உதவிகளை ஈழத் தமிழர்கள் செய்ய முடியாத நிலையில், ஒரு படத்திற்கே ஒரு கோடி சம்பளம் வாங்கும் ரஜினி, நிதி சேகரிக்க ஈழத் தமிழர்களிடம் வருவது எந்த வகையில் சரி என்றும் ஈழத் தமிழர்களிடையே கேள்விகள் எழுப்பப் பட்டன.

இந்தப் பின்னணியில் பகிஷ்கரிப்பு நிகழ்ந்தது பற்றிப் பலரிடையே இது சரியான நடவடிக்கை என்ற அபிப்பிராயம் இருந்தாலும், தீவிர ரஜினி ரசிகர்களுக்கு இது கொஞ்சம் வேதனை தரும் விவகாரம்தான். 'இவங்கள் தேவையில்லாமல் பொது நிகழ்ச்சிகளில் அரசியலைப் புகுத்துறாங்கள்' என்ற திட்டுகளைக் கேட்கக் கூடியதாக இருந்தது.

"சுவிஸ் தமிழர்களே அதிகம் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். சுவிஸ் அரசு தமிழகதிகளைத் திருப்பி அனுப்புவதில் காட்டிவரும் தீவிரமும், இந்தத் தீவிரத்திற்குத் தமிழகத்தில் இருந்து ஈழ அகதிகள் திருப்பி அனுப்பப் பட்டமை காரணம் என்ற நம்பிக்கையும் சுவிஸில் எழுந்த மனக் கொதிப்பிற்குக் காரணம் எனலாம். ஆனால் மிகவும் செல்வாக்குக் கொண்டிருக்கும் நடிகரான ரஜினியைப் பகைப்பது, ஏற்கனவே தமிழகத் தமிழர்களை ஈழத் தமிழர்களுக்கு எதிராகத் திருப்பியவர்களுக்கு இன்னொரு வாய்ப்பான சந்தர்ப்பமாக அமையலாம். குறிப்பாக ஈழத்தமிழர்களுக்கு எதிராக எழுதுவதை வழமையாகக் கொண்டுள்ள தமிழகப் பத்திரிகைகள் பல இதில் ஆளையாள் முந்தலாம். இது ஈழத்தமிழர்களுக்கு மீண்டும் பாதிப்பைக் கொண்டு வரலாம். சிலவேளை பத்திரிகைகள் தமக்கு(ம்) அவமானம்

www.tamilarangam.net

என்று வாயை மூடிக்கொண்டு இருக்கலாம். இதனால் நாம் வேறு வழிமுறைகளைக் கையாண்டிருக்கலாம்" என்றார்.

நிகழ்ச்சிக்குச் சென்று அங்கு ரஜினியிடமே சொல்லி விளங்கவைத்திருக்கலாம் என்றார் அவர் மேலும்.

"ரஜினி முன்னணி நாயகனாக இருந்தாலும் அதிக செல்வாக்கு இருந்தாலும், அவர் ஒருநாளும் ஆளும் வர்க்கத்தையோ ஜெயலலிதாவையோ போயும்போயும் ஈழத் தமிழர்களுக்காகப் பகைத்துக் கொள்ள மாட்டார்" என்றார் ஒரு தமிழக 'எக்ஸ்பேட்'. "ஆயினும் ஒன்று மட்டும் நல்ல விஷயம். தான் மட்டும் உழைத்தால் போதும் தன்னினம் எக்கேடு கெட்டாலும் போகட்டும் என்று எண்ணும் பல ஈழத் தமிழர்களது மனநிலை மாறி சமூக உணர்வு வந்துள்ளது. இந்த அரசியல் சமூக விழிப்புணர்வு தொடர்ந்தும் வளர்க்கப்பட்டு ஈழத் தமிழினத்தை நல்ல வழியில் சிந்திக்கவைக்கத் தொடர்ந்தும் அரசியல் நடவடிக்கை தேவை. இது ஒரு நல்ல தொடக்கம்" என்றார் அவர்.

ஒருவர், நிகழ்ச்சி நடத்துவதில் போட்டியாளர்களே இந்தப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையைத் தூண்டினார்கள் என்கிறார். 'சுயநல நிகழச்சிப் போட்டியாளர்களால் அநாவசியமாக தமிழக மக்களது வெறுப்பைச் சம்பாதிக்க வேண்டியுள்ளது' என்ற முணுமுணுப்பும் கேட்காமலில்லை. இவ்வளவு காலமும் பல இந்தியக் கலைஞர்கள் வந்துபோன போதும், ஏன் ரஜினிக்கு மாத்திரம் பகிஷ்கரிப்பு என்ற கேள்வி பரவலாக உள்ளது. ரஜினியைப் போலன்றி, முன்பு வந்தவர்கள் தமது பணப்பையையும், இங்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களது பணப்பையையும் நிரப்பும் நோக்கில் வந்தார்கள். குறைந்த பட்சம் ரஜினி

# கடலும், இரு கண்களும்

எங்கள் வீடு
அழகிய கடற்கரையில்.
குலைதள்ளிய தென்னைகளும்
குயில் கூவும் பூமரங்களும்
சூழ்ந்து நிற்கும் மணல்வெளியில்.

வெள்ளித்தட்டுகள் மிதக்கும்
வைரப் புள்ளிகள் ஒளிச்சிதறும்
வரப்புகளை எழுப்பும் அலைகள்
இல்லாமல் போகும், பின்
முயல்போல் நழுவும்
மான்போல் துள்ளும்.
மழைநாளில் -
நுரையீரல் நோயாளிபோல்
சீறும், சிதறும்
தாவும் வீழும்
ஓலமிட்டு அடங்கும்.
கடலுக்கும் வீட்டிற்குமிடையே
கடுவையாறு.
அதன் வாயிலிருந்து
புற்றீசல்களாய் 'லாஞ்சு'கள் எழுந்து
வாத்துக் குஞ்சுகளாய் மறையும்.
இருள் படரும் நேரம்
தனிமை வத்தல் பாடல் சுகத்தில்
கடலும் வானும் கட்டித் தவழும்.
எல்லாம் அழகே
எங்கள் வீட்டிலிருந்து பார்க்கும்போது.
நங்கூரமிட்டு நின்றுவிட்ட
இராணுவக் கப்பல் மட்டும்
கண்ணை உறுத்தும்.

**கனிவண்ணன்**
**தமிழ்நாடு**

www.tamilarangam.net

அநாதைக் குழந்தைகள் - நிதி சேகரிப்பு என்று கூறிக்கொண்டு வந்தார்.

இதுபற்றி இங்கிலாந்தில் உள்ள பத்திரிகையாளர் ஒருவர் சொன்னது: "பொதுவாக சகல சீரழிந்த கலைகளும், அவற்றை உருவாக்கும் கலைஞர்களும் நிராகரிக்கப்பட வேண்டியவர்களே. அந்த வகையில் இன்று இந்தச் சீரழிவும் தமிழ்ச் சினிமாவின் பிரதான பாத்திரமான ரஜினியிடம் உள்ளது. அதனால் ரஜினியை மட்டுமன்றிச் சீரழிவுக் கலையைத் தயாரிப்பதில் ஈடுபடும் ஏனைய அனைவரும் பகிஷ்கரிக்கப்பட வேண்டும். தமிழகத்தின் சினிமாக் கலைஞர்கட்கு மட்டுமல்ல, ஈழத்தின் சீரழிவுக் கலைஞர்களுக்கும் இது பொருந்தும்".

கனடாவில் ரஜினியின் நிகழ்ச்சியைத் தாங்கள் நடத்தவில்லை என்பதைத் தெளிவுபடுத்த உலகத் தமிழர் அமைப்பு துண்டுப் பிரசுர அறிக்கை விட்டதே அங்கு பகிஷ்கரிப்பிற்குக் காரணம் என்று தேவி இதழ் எழுதியுள்ளது. நிகழ்ச்சிகளுக்குப் பின் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்வையிட ரஜினி திட்டமிட்டிருந்ததாகவும், நிகழ்ச்சிகள் வெற்றி தராததால் அவர் மனமுடைந்து நாடு திரும்பியதாகவும் ஆனந்த விகடன் எழுதியுள்ளது. 'புலித்தனமான மிரட்டலே காரணம்' என்றும் இதே கட்டுரை கூறுகிறது.

புலி மிரட்டல் என்றும், வேறு விதங்களிலும் ஈழத்தமிழர் மீதான வெறுப்புணர்வுகளைத் தமிழகப் பார்ப்பனப் பத்திரிகைகள் கக்கிவருவது புதிய விடயமல்ல.

## இருநூறுபேர்

இறந்தவர்கள் இருநூறுபேர் என்று.
இலகுவாய்ச் சொல்லியாச்சு.
இரத்தமும் சதையுமாய் இறந்தார்களென்று.
இலகுவாய் எண்ணலாச்சு.
விகிதாசார கணக்கின்படி - போரில்
வெற்றி என்று சொல்லியாச்சு - இதனால்
இறந்தவர்கள் இருநூறுதானேயென்று
இலகுவாய் எண்ணலாச்சு.

பிணங்கள் இருநூறை
எப்போதாவது பார்த்ததுண்டா? - இல்லை
எங்களூர் மயானத்தில் இருக்கும்
சமாதிகளைத்தானும் எண்ணியதுண்டா?
உந்தன்; தாய் தந்தை சகோதரம்
உற்றார் நண்பர் உறவினர்
அயலவர் அறிந்தவர் தெரிந்தவரே
இருநூறுதான் இருக்கும்.
இவர்கள் அத்தனைபேரும்
பிணமானால் எப்படி இருக்கும்
அப்படித்தான் இருக்கும்
இறந்தவர்கள் இருநூறும்.

**மகேன், ஒஸ்லோ**

## புதிய சாதனை!

நோர்வேயின் தினசரிப் பத்திரிகைகளில் ஒன்றான 'ஆப்தன்பூஸ்தன்' விற்பனையில் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது. அண்மையில் இதன் காலைப் பதிப்பு தனது 2,60,000வது சந்தாதாரரைப் (நோர்வேயின் சனத்தொகை நான்கு மில்லியன்) பெற்றுக் கொண்டது. கடைகளில் பத்திரிகையை வாங்குவோர் கணக்குத் தனி!

ஏனைய பல நாடுகளைவிடவும், நோர்வேயில் பத்திரிகைகள் படிப்பதை அனேகர் வழக்கமாகக் கொண்டிருப்பதுடன், சிறுவர்களும் இளைஞர்களும் பத்திரிகை படிக்கும் வழக்கம் உடையோராய் இருப்பதும் பத்திரிகை விற்பனை அதிகமாக உயரக் காரணமாகக் கூறப்படுகிறது. 3,700 பேர் 'ஆப்தன்பூஸ்தன்' பத்திரிகையை வீடுகளில் விநியோகம் செய்கின்றனர்.

ருத்ரன்

www.tamilarangam.net

# வாழ்க்கை வழியில் சிலபேர்

**இளவாலை விஜயேந்திரன்**

சுவடுகளில் சிலகாலம் முன்பு எனக்குத் தெரிந்த சிலரது மரணங்கள் பற்றி எழுதியிருந்தேன். துரதிர்ஷ்டவசமாக மறுபடியும் அப்படி எழுத நேர்ந்துவிட்டது. இலக்கிய ரீதியில் நன்கு அறியப்பட்ட எளிமையான ஒரு மனிதரை இந்த இடைவெளிக்குள் இழக்க நேரிட்டது. டானியல் அன்ரனி என்ற அந்த இலக்கியகர்த்தா, சஞ்சிகை ஆசிரியர் யுத்த முனையில் நோய் காரணமாக மரணமுற்றார் என்ற செய்தி இந்த இடைவெளிக்குள் கிடைத்தது.

தான் நம்பிய கருத்தில் உறுதியான பற்றும், அதற்காகத் தன்னால் இயன்ற வழியில் உழைக்கும் அர்ப்பணிப்பும் மிக்க இலக்கியவாதி என்று டானியல் அன்ரனியை அறிவேன். அவருடனான எனது சந்திப்புகள் ஒருசிலவே நிகழ்ந்திருந்தாலும், அவரது எளிமை மிக மதிப்பிற்கு உரியது. தனக்கு எதிர்மாறான கருத்துகளைக் கொண்டவர்களை மதிக்கத் தெரிந்தவர்கள் குறைந்த இந்த உலகில், டானியல் அன்ரனி போன்றவர்கள் அசாதாராண மனிதர்களாகக் கண்களில் தெரிவது இயல்பே. ஆனால் அவர் மிகச் சாதாரணராக இருந்தார். உழைக்கும் மக்களின் விடிவிற்காகக் குரல் கொடுத்த ஒரு படைப்பாளியாகவும், நெருக்கடியான நிலையிலும் ஒரு தரமான இலக்கியச் சஞ்சிகையை வெளிக்கொணர்ந்த ஆசிரியராகவும் அவரை எனக்குத் தெரியும். அவர் ஆசிரியராக இருந்த 'சமர்' சஞ்சிகை, தரத்தைப் பேணுவதில் கவனமாக இருந்தது. நான் படித்த அவரது சில சிறுகதைகளில் அவரது மனிதநேயம் வெளிச்சமிட்டது.

இன்று டானியல் அன்ரனி இல்லை. அவரது படைப்புகளும், சமர் சஞ்சிகை மூலம் அவர் புரிந்த பணியும் அவரது எச்சங்களாகவும், நினைவுகளாகவும் எம்மிடை நிற்கிறது; அவரை நேரடியாக அறிந்தவர்களிடம் அவரது நல்ல, எளிமையான பண்புகளும்கூட.

டானியல் அன்ரனி இறந்த செய்தி சில நாட்களின் பின்பே யாழ்ப்பாணத்தில் இருந்த அவரது உறவினர்களுக்குக் கிட்டியது. யாழ்ப்பாணத்தின் துயர நிலை அது. தொலைத்தொடர்பு வசதிகள் உச்சத்தில் இருக்கும் ஐரோப்பிய நாடொன்றில் வசிக்கும் எனக்கு, 'அருகில்' உள்ள ஜேர்மனியில் வசித்த சின்ன ராஜேஸ்வரனின் மரணம் தெரியவந்தது மிகவும் பிந்தி. இது ஒஸ்லோவின், உறவுகளைத் தொலைத்த வாழ்வின் துயரம்.

பத்து வருடங்கள் முன்பு அவரை எனது நண்பன் ஒருவனது மைத்துனராக அறிமுகம் ஆக்கியது காலம். மிக அதிகமாக வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்த அவரை, என்னால் பலகாலம் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. இறந்தபின்னும் அவரைச் சரியாகப் புரிந்துகொண்டேனா என்பதும் தெரியவில்லை.

ஐரோப்பிய வாழ்வில் பல இலக்கியவாதிகளும் தமது எழுத்துகளை அரசியலில் தோய்த்து எழுதியபோது ராஜேஸ்வரன் குழந்தைகளுக்காகத் தனது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நேரத்தைச் செலவிட்டார். நீண்ட காலமாக இடைவிடாது வெளிவந்த 'சிறுவர் அமுதம்' என்ற அவரது சஞ்சிகை, ஐரோப்பாவின் ஒரேயொரு சிறுவர் இதழாக மலர்ந்தது. ஒரு சஞ்சிகையை நடத்துவதில் இருக்கக்கூடிய அத்தனை சிரமங்களும், சிறுவர் சஞ்சிகையிலும் இருந்திருக்கும் என்பது அனைவரும் புரியக்கூடிய ஒன்று. ஆனால், தான் தொடக்கிய முயற்சியை இடைவிடக் கூடாது என்ற உறுதியுடன் தனக்குள்ள வசதிகளுடன் சிறுவர் அமுதம் என்ற வெளியீட்டைப் பல ஐரோப்பிய நாடுகளிலும் கிடைக்கும் வகையில் வெளியிட்டார். சிறுவர்களுக்கு மட்டுமன்றிப் பெரியவர்களுக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் வெளிவந்த அந்த இதழின் இடைவெளியை யார் நிரப்பப் போகிறார்கள்?

சின்ன.இராஜேஸ்வரனின் மரணம் அகாலமாக வந்தது. புலம்பெயர்ந்த நாடுகளில் அனேக தமிழர்களை உயிரழித்த வீதி விபத்தே அவரது உயிரிழப்பிற்கும் காரணமாயிற்று. தவிர்த்திருக்கக் கூடிய இவ்வாறான உயிரிழப்புகளால் ஏற்படும் துயரம் சற்றே அதிகம்தான்.

வில்லிசையில் சரித்திர, இதிகாச, பக்தி விடயங்களை மட்டுமே சொல்லலாம் என்று பலர் நம்பிய காலத்தில், மக்களிடையே சாதாரணமாக இருக்கக்கூடிய ஒரு கதாபாத்திரமாக கண்மணி என்பாளைப் படைத்து அதை வில்லிசையாக எழுதியவர் மஹாகவி. அந்த வில்லிசைக்கு உயிர் கொடுத்தவர் லடீஸ் வீரமணி. அந்த வில்லிசை உருவாகிப் பல காலம் பின்பும் அதுபற்றிப் பேசும்படி சிறப்பாகப் படைத்த அந்தக் கலைஞரை ஏறத்தாழப் பத்து வருடங்களுக்கு முன்பு தமிழகத் தலைநகரில் சந்தித்தேன்.

ஒரு படைப்பாளிமீது அபிமானம் கொண்டிருந்தால், அந்தப் படைப்பாளியை நேரே பார்க்காமல் இருப்பது நல்லது என்று எனது நெருங்கிய நண்பனும், பரந்தறியப்பட்ட படைப்பாளியுமான வடகோவை வரதராஜன் அடிக்கடி கூறிக்கொள்வது வழக்கம். ஏனோ லடீஸ் வீரமணி அவர்களைப் பார்த்ததும் அந்த வசனங்கள் நினைவுக்கு வந்தன.

அப்போது சென்னையில் நாடகம் ஒன்றையும், கவிதா நிகழ்வு ஒன்றையும் இயக்கிக் கொண்டிருந்தேன். அந்தக் கவிதாநிகழ்வின் ஒத்திகையில் வாகன ஓட்டி ஒருவரது தோற்றத்தில் எனக்குச் சில 'ஐடியா'க்களை அவர் கொடுத்தபோது, அவரது (உண்மைப்) பெயர் எனக்குத் தெரியாது. அதன்பின் நண்பர்களது அறிமுகத்தால் அவரைக் கண்டுகொண்டாலும் ஏனோ நெருங்கிப் பழக முடியவில்லை. இப்போதும் அவரது பாடல்களும், அந்த மெல்லிய தோற்றமும் மனதுக்குள் இறுகி நிற்கின்றன. ஜெயகாந்தனின் சில நாடகங்கள் உட்படப் பல நாடகங்களில் எத்தனையோ கதாபாத்திரங்களுக்குத் தனது திறமையால் உயிர்கொடுத்த அவருக்கு இன்று உயிர் இல்லை; மறக்க முடியாத ஒரு பாத்திரம் ஆகிவிட்டார் அவர்.

www.tamilarangam.net

# கண்டது கேட்டது கண்டவர் சொன்னது!

— அயலான்



இலங்கையில் தேர்தல்களுக்கு ஒரு வரலாறு உண்டு. அது என்னவெனில், நாட்டு மக்கள் அனைவரும் - இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் - 24 மணி நேரத்திற்குள் மொட்டை அடிக்கப் படுவதுதான். இந்த நாளில் மட்டும்தான் இலங்கையின் புதல்வர்கள் அனைவரும் ஒரேமாதிரியாக (ஏமாளிகளாக) மதிக்கப் படுகிறார்கள். தேர்தல் வாக்குறுதிகள், தேர்தல் முடிவின் பின்னர் சும்மா பொழுதுபோகக் கதைத்த விஷயங்களாக ஆகுவது வழமை.

இம்முறை அதிக மக்கள் அன்னை சந்திரிகாவின் பெயரால் மொட்டை அடிக்கப்படப் போகிறார்கள். இதற்குள் வீரத் தமிழர்களும் அடக்கம். ஒரு தனிமனிதரோ அல்லது பாராளுமன்றத்தில் அதிகப் பெரும்பான்மை வகிக்கும் ஓர் அரசியற் கட்சியோ நினைத்தவுடன் சாதாரணமானமாகத் தீத்துவிடும் விடயமல்ல இனப்பிரச்சனை. அப்படியானதுதான் இனப்பிரச்சனை என்றால் தமிழர்கள் துப்பாக்கி ஏந்தியபோதே இலகுவாகப் பிரச்சனை 'அமத்தப்' பட்டிருக்கும். இதையெல்லாம் அறியாமலா சந்திரிகாவுக்குப் பின் அணிதிரளத் தமிழர்களை அழைக்கின்றன இலங்கையின் தமிழ்க் குரல்கள். சந்திரிகாவின் கையைப் பலப்படுத்துங்கள் என்று ஐரோப்பாவிலும் தமிழ்ப் பத்திரிகைகள் குரல் கொடுப்பது, 'வாருங்கள், எல்லோரும் சேர்ந்து தமிழீழ மக்களைப் பலிகொடுப்போம்' என்று கூறுவதுபோலவே எனக்குக் கேட்கிறது.

மலையகத்தின் குரலாகவும், இலக்கியத்தின் ஒரு பரிமாணமாகவும் பத்து வருடங்களுக்குமுன் வந்த 'தீர்த்தக்கரை' பலருக்கு நினைவிருக்கலாம். ஏறத்தாழ அதே

www.tamilarangam.net

அளவில், அதே மாதிரியான தரமான அட்டை, அச்சுடன் இடையிடையே 'குன்றின் குரல்' பார்க்கக் கிடைக்கிறது. மலையகத்தின் இலக்கிய முயற்சிகள் பற்றியும், அங்கு நிலவும் கலைகள் பற்றியும் அறிய வாய்ப்பளிக்கும் ஒரு களமாக குன்றில் குரலைக் காண முடிகிறது. பத்து வருடங்களுக்கு மேலாகத் தரமான இதழொன்றை நடத்துவதில் இருக்கக்கூடிய கஷ்டங்கள் சாதாரணமானவை அல்ல.

இந்த இதழைத் தொடர்ந்து படிப்பவர்கள் மலையகம் பற்றிய பல சரியான தகவல்களைப் பெறமுடியும். தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகம் (அதென்ன அரச திணைக்களப் பிரிவா?) வெளியிடும் இந்தச் சஞ்சிகையின் ஆசிரியர் அந்தனி ஜீவா.

குன்றின் குரல் பற்றிய தொடர்புகட்கு: அந்தனி ஜீவா, ஆசிரியர் (குன்றின் குரல்), 30 புஸ்பதான வீதி, கண்டி.

"பேசாப் பொருளைப் பேசத் துணியும்" ஒரு நாடகம் அன்னை இட்ட தீ. நாடகத்தின் கருப்பொருளைப் பொறுத்தவரை ஒரு துணிச்சலான முயற்சி. தமிழீழத்தில் நிகழும் யுத்தம் சாதாரண மக்களை உளவியல் ரீதியில் எவ்வாறு பாதிப்பிற்கு உள்ளாக்குகிறது என்ற கேள்விக்கு ஒரு சிறு தெளிவான பதில் இந்த நாடகம். குழந்தை சண்முகலிங்கத்தின் ஆளுமை மிக்க பிரதியை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் தயாரித்துள்ளனர்.

குழந்தை அவர்களின் பிரதிகள் கடந்த பத்து வருடங்களாக யாழ்ப்பாணத் தமிழ் நாடக அரங்கிற்கு ஒரு உறுதியான பரப்பை வழங்கிவருகின்றன. இது அவ்வகையிலான ஒரு மணிமகுடம் எனலாம். யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடமும், நுண்கலைப் பிரிவும் இணைந்து பங்கெடுக்கும் இந்த நாடகத்தில் வரும் கதாபாத்திரங்கள் அத்தனையும் இயல்பாக உள்ளதால் நாடகத்தின் செய்தி இலகுவாகப் பார்வையாளனைப் போய்ச் சேர்கிறது.

இந்த நாடகம் பற்றி ஒரு விரிவான விமர்சனமே எழுதவேண்டும். இப்போதைக்கு இதை ஒரு குறிப்பாக எழுதக் காரணம், இந்த நாடகத்தின் வீடியோப் பிரதி லண்டனில் விற்பனைக்குக் கிடைப்பதைத் தெரியப் படுத்தத்தான். இந்த வீடியோப் பிரதிகளின் விற்பனை மூலம் பெறப்படும் பணம் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிகிச்சை வழங்க மருத்துவ பீடத்தால் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப் படுகிறது. இங்குள்ள வீடியோ விநியோகஸ்தர்கள் இதில் அக்கறை எடுக்கலாம்.

தொடர்புகட்கு: Thamil House,/ 720, Romford Road,/ London E12 6BT.

## திருடனின் காரணம்

நோர்வேயில், கடையொன்றில் 2500 குறோணர்கள் களவெடுத்து ஒரு திருடன் பிடிபட்டான். பொலிஸ் அவனிடம் சில கிழமைகளுக்கு முன்பு தானே நீ 4மில்லியன் (40லட்சம்) குறோணர்கள் அதிஷ்ட லாபத்தில் பெற்றாயே ஏன் இப்பவும் களவெடுக்கிறாய் என்று வினாவினார்கள். அதற்குத் திருடன் "நேர்மையான முறையில் கிடைத்த பணத்தைப் பயன்படுத்துவது சந்தோஷத்திற்குரியது அல்ல" என்று பதிலளித்தான். இவன் நோர்வே நாட்டவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*தி.திலீபன்*

www.tamilarangam.net

# மண் மனம்

## 2 பாகம்

### அத்தியாயம் 5.



"செக்ஸ் எண்டா என்ன?"

"பாலியல்"

"பாலியல் எண்டா...?"

"ஒரு ஆணும் ஒரு பெண்ணும் உடலால் உறவு கொள்வது"

"ஒரு ஆணும் ஆணும், ஒரு பெண்ணும் பெண்ணும் உடலால் உறவு கொண்டால்....?"

"அதுவும்தான்"

"உடலும் உடலும் முட்டினால் sexஓ?

"இல்லை"

"அப்ப உடலின்ரை உறவு எது?"

"அதுதான்"

"எது?"

"சும்மா போய் படுடா"

* * * *

ஒருநாள் ரகுநாதன் தன் sex விழிப்புணர்வுகளைத் தனது அக்காவுடன் பகிர்ந்துகொண்ட போது கிடைத்த சம்பாசணை இது. 'ரீன் ஏஜ்' எண்டு ஒரு பிரச்சனை இருக்குதாம். 'ரீன் ஏஜ்' இலதானாம் எல்லாம் வரும். என்ன வரும் எண்டு கேட்டா ஒருத்தருக்குந் தெரியாதாம். அது ஒரு மாதிரியா வருமாம். அந்த நேரத்திலை சரியான கவனமா இருக்க வேணுமாம். சிலநேரம் எல்லாம் தெரிஞ்சதுபோல..... இலட்சியங்களோடை வருமாம். அந்த நேரத்திலை சரியான கவனமா இருக்க வேணுமாம். சிலநேரம் ஒண்டும் தெரியாமல் பேக்குஞ்சு மாதிரி வரும்!

சிலநேரம் ஊரையே எதிர்க்கிற தைரியத்தோடை வந்து உன்னை உலுப்பும்!

www.tamilarangam.net

சிலநேரம் பொய்யாய்... பழங்கதையாய்... சவர்க்காரக் குமிழிகளாய்... பலமற்றதாய்... பாவமாய்... பரிதாபமாய்..... காற்றசைவில்கூட நொருங்கக் கூடியதாய் அது மிக மிக இன்மையாய் இல்லாமல் வரும்! சிலநேரம் உனக்கே ஒண்டுந் தெரியாது. நீ நினைக்கிறதுதான் சரி எண்டு உனக்குத் தெரியும். அந்த நேரத்திலை கொப்பாவோ கொம்மாவோ கொக்காவோ என்ன சொன்னாலும் உனக்கேறாது. நீ புடிச்ச முயலுக்கு மூண்டு கால் எண்டு நிப்பாய். அதுவும் ஒரு 'ரீன் ஏஜ்' குழப்படிதான்.

* * * * *

சும்மா பம்மாத்து விட்டுக்கொண்டு நான் சுசீலாவைக் காதலிக்கேல்லை. அவள் வடிவானவள் எண்டிறதிலை எந்த ஐமிச்சமும் இல்லை. பாலேந்திரன் இண்டுவரைக்கும் அவளுக்காக உயிரையே விடுறான். கலியாணம் முடிச்சாப் பிறகும் பாலேந்திரன், அவள் ஒரு நல்ல பெட்டை எண்டிறதிலை அபிப்பிராய பேதமில்லாமல்தான் இருக்கிறான். சும்மா ஒருக்கா கொயிலடிப் பொடியளிட்டைக் கேட்டுப் பாருங்கோ. அவளின்ரை நடைக்குக் கனக்க 'மாக்ஸ்' போடுவாங்கள். பிறகு, அவளது உடம்பு.... கால்.... தொடை.... இடுப்பு.... நெஞ்சு.... கொங்கையென.... (கொங்கைக்கு அழகிய தமிழ் வடிவங்கள் இலக்கியத்தில் இருக்கும்பொழுது எமது யாழ்ப்பாணத்துப் பொடியள் ஏனோ மொ.... என்று பாவிக்கிறார்கள். இதுபற்றி யாருங் கண்டறிந்து ஆய முனைக) இப்பிடியே அவங்கள் மருண்டு போவாங்கள். நான் ஒண்டும் விடுபேயனில்லை. எனக்கும் மாக்ஸ் போடத் தெரியும். மார்க்ஸ் போடத் தெரியிறது எண்டதுக்காக அவள் ஏற்றுக் கொள்ளவும் இல்லை. தெரியாது எண்டதுக்காக ஏற்றுக் கொண்டதாகவும் இல்லை.

ஏனோதானோவென்று தான் அவள் இருந்திருக்கிறாள். அவளுக்கு தன் உடம்பு தன் உளம் பற்றி யாரும் சொல்லிக் கொடுத்திருக்கவில்லை. அவளை அவளாலேயே புரிந்துகொள்ள முடியாமல் போயிருந்திருக்கக்கூடும்.

பாவம் சுசீலா!

நொந்துபோயிருப்பாள்.

பெண்மையை நோகாதே!

பெண்பாவம் பொல்லாதது!!

போங்கள் பெரியவர்கள். இந்தப் பெரியவங்கள் பெரிசாய் ஏதன் வெட்டிப் புடுங்குவாங்கள்! புடுங்க இஞ்சை ஒண்டும் இல்லை.

* * * *

அருளண்ணை வந்திட்டார் மாதிரிக் கிடந்தது. ஆனா வரேல்லை.

ரஞ்சி பிழைவிட்டிருக்க மாட்டாள்.

சனங்கள் திருவிழாப் பாக்கிற பம்பலில் இருக்கும், கூட்டியந்து பீநாறிப் பத்தை வளைவடியிலை விட்டாக் காணும் எண்டு சொன்னன். ஆகலும் நீங்கள் பயந்தியள் எண்டால் சனக்கும்பலிட்டை இருந்து பிரிச்சு இஞ்சாலை கொண்டுவாங்கோ. மிச்சம் நான் பாக்கிறன்.

என்ன ரஞ்சி! பெரிய விளையாட்டெல்லாம் காட்டிறியள் இதுக்குப் பயப்பிடிறியள்.

ஆனபடியா ரஞ்சி பிழைவிட்டிருக்க மாட்டாள். பத்தாக்குறைக்கு ரஞ்சியைப் பந்தம் பிடிக்க 10ரூபா ரஞ்சியின்ரை தம்பிக்கு லஞ்சம்.

ஆள் வந்திட்டுது.

ஆர் சுசீலாதான்.

என்ரை தேவதைதான்.

நல்லூர் மஞ்சத்துக்குப் பிறகு இப்பதான் தொடப்போறம். அதுவும் இவ்வளவு 'றிஸ்க்' எடுத்து.

ஒருத்தருங் காணேல்ல எண்டுதான்

www.tamilarangam.net

இரண்டுபேரும் நினைக்கிறம்.

வந்தவள்.... என்னட்டை ஏதோ 'திறில்'ஐக் கண்டு வந்தவள், அதே இடத்தில் நிக்கிறாள். இனி நான்தான் அவளை மறைவிடத்துக்கு வாங்கோ எண்டு கூப்பிட வேணுமாம். பாவம் அவளுக்கு கால்கள் கூட நடுங்குதுபோல இருக்குது. எனக்குப் பதறுது. திருவிழா எண்டபடியா அப்பர் வேட்டியைக் கட்டச் சொல்லிப் போட்டார். நான் நாக்கு வளைத்து 'கிட்ட வாங்கோவன்' எண்டு சொன்னது அவளுக்குக் கேட்டதோ என்னவோ தெரியாது.

நல்ல காலம் கேக்கேல்லைப் போல இருக்கு. கேட்டிருந்தா அவள் வந்திருக்க மாட்டாள். என்ரை பதட்டமும் என்ரை குரலும் அவளவு மோசமாய் இருந்திருக்கும். பல தடவை நான் இதையிட்டு வெட்கப் பட்டதுண்டு. இந்த நேரத்தில் 'கிட்ட வாங்கோவன்' எண்டு அடைத்த குரலில், கேரிய குரலில் யாராவது கூப்பிடுவார்களா என்ன?

அவள் மெல்ல என்னை நோக்கி நகர்ந்தாள். அவள் கிட்ட வரவர நான் செத்துக் கொண்டிருந்தேன். சிலசமயம் வரவேண்டாம் எனக் கூச்சலிடவும் தயாராய் இருந்தேன்.

சும்மா போங்கையா.

வந்திட்டாள்.

அவளே வாறாள்.

நான்–

அணைத்தேன்.

அவளுந்தான்.

வாழ்வின் உன்னதங்கள் ஒரு நொடியில் அவிழ்ந்தன.

அல்லது அவிழப் பார்த்தன.

"யாற்றாது உங்க ஓடுறது" எண்டு ஒரு முரட்டுக் குரல் கேட்டது. அது எங்கேயோ யாரையோ அதட்டும் முரட்டுக் குரல். அது அவளுக்கும் தெரியும். தெரிந்திருந்தும் அவள் சொன்னாள்... சீ முனகினாள்....



"ஆரும் பாக்கப் போகினம்.... ஐயோ விடுங்கோ...."

அதே குரல்...... அதே பல்வரிசை....

* * * *

நான்தான் ஏதோ அணைத்தமாதிரி விடுங்கோ என்கிறாய்.

நீ வராவிட்டால் நான் அணைத்திருக்க முடியாது.

ரஞ்சி சொன்னவுடன் நீயும் ஒப்புக்கொண்டுதானே வந்தாய்.

'கிட்ட வாங்கோவன்' என்ற என் சொற் கேளாமலேயே நீ என் கரங்களுக்குள் சரணடையவில்லையா?

உனக்கு நான் வேணுமா? என் உடல் வேணுமா?

ஒரு பாடல் எனக்காகப் பாடு என நான் கேக்கிறேன், உங்களுக்கு விசரா எனக் கேக்கிறாய்.

பிறகு, மீண்டும் மீண்டும் என்னை ஏன் அறுக்கிறாய்?

* * * *

சுசீலா, நீ பெருந்தொல்லையாகி விட்டாய் எனக்கு.

உன்னைத் தொலைக்கிறேன் பார். ஒண்டில் நான் உன்னை அடையிறன். இல்லாட்டி உன்னைத் துலைக்கிறன். இதுதான் என்ரை முடிவு.

(இனி)

# எழுத்தர்க்கு கொல்லாமை பாதகர்கள்.



உலகின் பல பகுதிகளிலும் பரபரப்பை ஏற்படுத்திய சல்மான் ருஷ்டி மரணதண்டனை விதிப்பிற்கு ஐந்து வருடங்களுக்குப் பிறகு ஏறத்தாழ அதே பிரச்சனையுடன் ஒரு பெண் எழுத்தாளர் தலைமறைவாகியுள்ளார். பெரும்பான்மையாக முஸ்லிம் மக்களைக் கொண்ட பங்களாதேஷைச் சேர்ந்த தஸ்லிமா நஸ்ரீன் என்ற இளம் எழுத்தாளருக்கே இந்தக் கதி ஏற்பட்டுள்ளது.

பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுக்கும் பங்களாதேஷ் எழுத்தாளர்களுள் தஸ்லிமா நஸ்ரீன் குறிப்பிடத் தக்கவர். இவரது படைப்புகள் இவரது அண்மைக்கால நாவல்களில் ஒன்று, அதன் கதைப்போக்கு முஸ்லிம் மதத்தவரை மனம் நோகச் செய்கிறது என்ற குற்றச்சாட்டுப் பரவலாக எழுந்ததை அடுத்து பங்களாதேஷில் தடை செய்யப் பட்டது. இது தஸ்லிமா நஸ்ரீன்மீது முஸ்லிம் மத அடிப்படைவாதிகள் கோபம் கொள்ளக் காரணமாயிற்று.

இந்தப் பிரச்சனை அலையாக இஸ்லாமிய மதவாதிகளது கோபத்தை எழுப்பிக் கொண்டிருக்கையிலேயே, இந்திய ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு (**Statesman**) நஸ்ரீன் வழங்கிய பேட்டியில்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


குரானில் உள்ள விடயங்கள் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும், இஸ்லாமிய மதச்சட்டங்கள் பற்றிய தனது எதிர்ப்பையும் வெளிப்படையாகத் தெரிவித்தார். இந்தச் சூழ்நிலைகள் மேலும் மதஉணர்வுக்குக் குந்தகம் விளைவிப்பதாகக் கருதிய மத அடிப்படைவாதிகள் வீதிகளில் இறங்கினர். நஸ்ரீன் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் ஆயிரக் கணக்கானோர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நஸ்ரீன் தற்போது தனது நண்பர் ஒருவரது வீட்டிலோ மேலைநாட்டு

ராஜதந்திரி ஒருவரது வீட்டிலோ தலைமறைவாக வாழ்வதாகச் சொல்லப் படுகிறது. அவரது உயிருக்கு மத அடிப்படைவாதிகள் ஆபத்து விளைவிக்கக் கூடும் என்ற அச்சத்தை நோர்வே, சுவீடன் அரசுகள் பங்களாதேஷிடம் தெரிவித்துள்ளன. சர்வதேச எழுத்தாளர் அமைப்பான 'பென்' (PEN) அமைப்புக்கு நஸ்ரீன் எழுதிய கடிதத்தில் மத அடிப்படைவாதிகளால் தனது உயிருக்கு ஆபத்து விளைவிக்கப் படலாம் என அச்சம் தெரிவித்துள்ளார்.

நஸ்ரீன் இந்தியப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி தவறுகளுடன் பிரசுரமாகியதாக அவர் கூறியிருந்தார்.

சிவன்



அந்தப் பேட்டி யூன் 4ம் திகதி டாக்காவில் வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் மறுபிரசுரம் செய்யப் பட்டவுடன் பங்களாதேஷ் அரசு அவரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்தது. அடிப்படை மதவாதிகள் நஸ்ரீனுக்கு மரணதண்டனை வழங்கப்பட வேண்டும் எனக் கோரி வருகின்றனர். ஆனால் பங்களாதேஷ் சட்டப்படி இரு வருடச் சிறைவாசமே நஸ்ரீனுக்கு வழங்கப் படலாம். அவர் மேற்கு நாடொன்றில் அரசியற் தஞ்சம் கோரலாம் எனவும் சில செய்திகள் கூறுகின்றன.

கடந்த வருடம் வெளிவந்த, சர்ச்சைக்குரிய நஸ்ரீனின் நாவலை நோர்வேயில் வெளியிட முயற்சிகள் எடுக்கப் படுகின்றன. ருஸ்டியின் சர்ச்சைக்குரிய நூலை வெளியிட்டமைக்காகச் (?) சுடப்பட்ட வெளியீட்டாளரான வில்லியம் நிகோர்டின் நிறுவனமும், வேறொரு வெளியீட்டாளர்களும் இதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## நூல் வெளியீட்டுக்கு!

கடந்த ஆறு ஆண்டுகளாகக் கிழக்கிலங்கையில் தமிழ் நூல்களை, வாசகர் வட்டம் ஒன்றை அமைத்து அதனூடு பரவலாக்கும் உதயம் பிரசுராலயம் புதிய வாசகர்களைத் தன்னுடன் இணைய அழைக்கிறது. கடந்த ஆறு வருடங்களில் பன்னிரு நூல்களை வெளியிட்டுள்ள உதயம், அடுத்துவரும் வருடங்களில் புதிய நூல்களை வெளியிட, புதிய அங்கத்தவர்களைத் தன்னோடு இணையுமாறு அழைக்கிறது. வாசகர் வட்ட அங்கத்தவர்களுக்கு வருடம்தோறும் இரு புதிய நூல்களும், நான்கு சஞ்சிகைகளும் அனுப்பிவைக்கப்படும்.

தொடர்புகள்: உஷாதேவி சிவதாசன், உதயம் பிரசுராலயம், 65 லேடி மனிங் டிறைவ், மட்டக்களப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஆசிரியர்,
சுவடுகள்.

அன்புடையீர், தங்களின் கடைசி சுவடுகள் கிடைத்தது, மிக்க நன்றி. முன் அட்டை ரொம்ப அழகாக இருக்கிறது. ஆக்கங்களும் சுவையாகத் தான் உள்ளது. கவிதை எழுதுவது பெரும் சாதனையல்ல என்பதை ஒஸ்லோவில் வசித்து வரும் சின்னஞ் சிறுமி சுவடுகளில் நிரூபித்துள்ளார். அவரின் கவிதை மிகவும் அற்புதமாக உள்ளது. எதிர்காலத்தில் கவிதைத்துறையில் தனி இடம் ஒன்றைப் பிடித்துக் கொள்வார் என்பதில் ஐயமில்லை.

நன்றி

அடுத்த இதழை எதிர்பார்த்து.....

நேசங்களுடன்,
முகமட்அபார்.

வணக்கம்

மாசி மாத 'சுவடுகள்' சித்திரை 5இல் கிடைத்தது. இதழனுப்பியமைக்கு நன்றி. வெளிநாடுகளில் இருந்து என்ன இதழ் வந்தாலும் உடனடியாகவே பதிலும், ஆக்கமும் அனுப்புவது எனது வழமை. காரணம் வேலைப்பழுவினால் மறதி உண்டாகலாம் என்பதற்காக.

இம்முறை 'சுவடுகள் 54' வெகு சிறப்பாக காத்திரமான பல அம்சங்களுடன் வெளிவந்தது கண்டு திருப்தியுடன்

# ருபம்சம்தி

கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பு பெண்கள் (சிங்களம்,தமிழ்) தழுக்கி, மினுக்கி ஆண்களை வலிய வந்து அழைத்து விபச்சாரம் பண்ணி பணம் கறக்கும் முறைமையை கண்ணால் காணலாம். "தன் பிள்ளையின் புட்டிப்பாலுக்காக, உணவுக்காக, கணவனின் மருந்துக்காக தன்னுடல் விற்கும் பெண்கள் விபச்சாரிகளா?" என்பது 'பூகம்பனி'ன் கேள்வி. நான் கேட்கிறேன் இத்தனைக்கும் விபச்சாரம் தானா தேவை? இன்னும் எத்தனையோ வழிமுறைகள் உள்ளனவே. அது கண்ணுக்குத் தெரியாமல், கவர்ச்சியுள்ள பல ஆண்களின் உடல் கட்டான இச்சையைப் பெறும் என்னவோ கண்ணகை-கோவலன், இராமர்-சீதை, நளன்-தமயந்தி போன்ற ஜோடிகளில் பெண்ணை உயர்வானவளாக்கி, ஒரு சிறுமியின் பால பாடத்திலிருந்து போதனை செய்வது, தமிழர் பரம்பரையானாலும் செவிவழிக் கதைகளானாலும் கற்பை வைத்து உயர்த்தியாகக் கற்பதற்குப் பற்பல காரணங்களைக் கோடிடலாம்.

பெண் என்பவள் ஒரு கவர்ச்சியாலும், அழகுடைமையாலும், நெளிவு சுழிவுகளாலும் வார்க்கப்பட்டவள். அத்தோடு எவ்வளவுதான் மறுத்தாலும் அவள் திமர் உணர்வுகளைக் குதிர்த்து விடக்கூடியவள். இந்தப் பலவீனம் அவளைப் பீடித்துள்ளது. விபச்சாரப் போக்கில் ஆணைவிடப் பெண்ணின் பங்கு

www.tamilarangam.net

மகிழ்ச்சியும் கூட. என்ன இருந்தாலும் 'சுவடுகள்' தான் வளரும் நாட்டை மறவாமல் அடிக்கடி நோர்வேயைப் பற்றிய செய்திகளையும் சுமந்து வருவது கண்டு மகிழ்ச்சி.

யமுனா.ராஜேந்திரனின் இலத்தீன் அமெரிக்கத் திரைப்படங்கள் பற்றிய விமர்சனம் மிகவும் சிறப்பு. விக்கியின் அமெரிக்க மடல் பல அரிய செய்திகளை எம்மளவில் கொணர்கிறது.

மாத்தையா பற்றிய 'மௌன உறைவி'னோடு நானும் உடன் படுகிறேன். 'பூகம்பனின்' விபச்சாரி(ரர்)கள் பற்றிய வாதத்தனமான கேள்வி இன்னும் என்னுள்ளே தாக்கத்தை ஏற்படுத்துகிறது. 'கட்டிப்பிடிக்கும் போது ஆணும் பெண்ணும் சேர்ந்தே கட்டிப் பிடிக்கிறார்கள். ஆனால் கர்ப்பமானவுடனே ஆண் காணாமல் போய்விடுகிறான்.' என பாக்கியராஜ்(ா)வின் ஒரு வசனம் இருக்கிறது. 'விபச்சாரம்' என்ற வார்த்தையைக் கேட்டவுடன் யாரது மனவெண்ணமும் ஒரு ஆணைச் சுட்டுவதில்லை. இது மரபு வழியான சாபக்கேடு. பெண்கள் பக்கம் சில விடயங்களை நோக்க வேண்டிய ஒரு நிலைக்கு நாம் இயல்பாகவே ஆளாகிறோம். இதனால் தானோ கணிசமானது. அனுபவமும் சுகமுறையும் பெண் இசைவினால் ஏற்படுவதால் பெண் அங்கே ஆணை விட முதன்மை பெறுகிறாள்.

பெண்ணின் கவர்ச்சி பாதுகாக்கப்பட வேண்டியது. மறைக்கப்பட வேண்டியது. சிற்றின்ப உணர்வுகளின் பிறப்பிடமே பெண்ணின் கவர்ச்சி என்பது பொருந்தும். இங்கே கட்டுரையின் தலைப்பு நோர்வேப் பெண்களை விபச்சாரிகள் என்று கூறும் தமிழர் பற்றியதாக இருக்கையில் நம் நாடு பற்றிய ஒரு நோக்கம் கூறுதல் வேண்டியதாகிறது.

கற்பு விடயங்களில் தமிழர் பல மரபுக் கதைகளைப் படித்துக் கேட்டு சில வகைகளில் ஊறிப்போய் இருப்பதனால் வெளிநாட்டவரை நோக்கும் போது அதுவும் வெள்ளைக்காரரை, வெள்ளைக்காரிச்சியை – அவர்களின் பொதுவாகப் பழகும் தன்மை – பாதைகளில் கூடக் கூச்சமின்றி காதலர்களோ அல்லது மற்றவர்களோ உதட்டோடு உதடு பொருத்தி முத்தமிடும் பழக்கம் என்பன அவர்களை அப்படியானவர்களாக அறிமுகப் படுத்தி விட்டது. இதனை கடற்கரை நகரங்களிலும் திருகோணமலையில் ஆரம்ப காலங்களிலும் காணக்கூடியதாக இருக்கும்; இருந்தது. அது ஒரு புறமிருக்க இப்போதும் நோக்கத்திற்கு 'பூகம்பன்' சொன்னவை சாட்டுகள் என்று ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது.

மேற்கூறப்பட்ட பெண்களை விபரித்த 'பூகம்பன்' இன்னுமொரு விடயத்தைக் கூறி வாதத்தை அர்த்தம் குறைந்ததாக்குகிறார்.

"ஒரு பெண்ணின் விருப்பமின்றி ஒருவன் உடலுறவு கொள்ள முயன்றால் அது பாலியல் பலாத்காரமே" இங்கே பூகம்பனின் விபச்சாரத்திற்குக் கொடுத்த வரைவிலக்கணம் காணாமலே போய் விடுகிறது. அடுத்து ஆண் விபச்சாரத் தன்மையாய் சீதனம் வாங்குவதைக் கூற வந்தவர் விபச்சாரி காசு வாங்கியே விபச்சாரம் செய்வாள். ஆனால் எங்களுடைய தமிழ்ப் பெண்கள் ஒரு ஆணுக்கு (மாப்பிள்ளைக்கு) காசு கொடுத்து அவள் (மணமகளாகப்) போவது என்றால் அது என்ன... ஆண்விபச்சாரமே என்பது 'பூகம்பன்' முன் வைக்கும் வாதம். சீதனம், சீர்வரிசை என்பது விபச்சாரம் என்பதற்கு எத்தனை வகையிலும் ஒவ்வாதது. கொடுக்கும் சீதனம் அந்த மணமக்களின் ஆரம்ப வாழ்விற்கான ஒரு உந்தாக ஆரம்ப செலவுகள் போன்றவற்றிற்கான ஒரு மாற்றீடாகவே எடுத்துக் கொள்ளலாம். அதற்காக

www.tamilarangam.net

www.tamilarangam.net

சீதனத்தைப் பேரம் பேசித்தான் திருமணம் முடிக்க வேண்டும் என்பதல்ல எனது வாதம். ஆனால் காசுடன் போய் தன் கணவனுக்காக முந்தானை விரிப்பதை எந்தக் காலத்திலும் விபச்சாரம் என்ற இழிவுக்குள் எந்தப் புத்திசாலி தான் ஏற்றுக் கொள்வான்.

அடுத்து 'வேசி' என்ற பதம் பற்றி - இது நம்மூர் தமிழ் மக்களிடையே கோபவசைச் சொல்லாக பாவிக்கப்படுகிறது. ஆனால் 'பூகம்பனி'ன் நண்பர் அந்த நோர்வேப் பெண்ணைப் பார்த்துப் பொதுப்படையாகக் கூறி இருக்கலாம். அதற்காக அவள் அல்லது அவர் அப்படித்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

"ஆண் கலியாணம் செய்யுமுன் ஆயிரம் செய்யலாம்" என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

ஆணும் பெண்ணும் தத்தமது மனதளவில் தூய்மையானவளாக/வனாக இருந்தால் உடலின்பம் என்பது ஒரு கட்டுப்பாட்டின் செயலாய் அடங்கும். அதற்கு தமிழர்களிலும் சரி மற்றவர்களிலும் சரி சரியான மத அனுஷ்டானமின்மையே அடிப்படைக் காரணமாய் விளங்குகின்றது. தேவையற்ற பார்வை தேவையற்ற பேச்சு தேவையற்ற சிந்தனைத் தவிர்த்தல் என்பன மனிதனை உன்னத நிலைக்கு ஆக்கும் காரணிகள். எனது கருத்து மனிதன் மதத்துடன் இணைய வேண்டும் என்பதுவே.

அடுத்து சுவடுகள் இப்போதெல்லாம் கவிதைகளை வெகு சிறப்பாகவே தேர்ந்தெடுத்து வெளியிடுகிறது. பாராட்டுக்குரியது. நன்றி.

அன்புடன்
இளைய அப்துல்லாஹ்
அக்குறணை - இலங்கை.

கனம் சுவடுகள் ஆசிரியருக்கு,

தங்கள் பத்திரிகையின் ஓர் பிரதியை தற்செயலாக எனது நண்பர் ஒருவர் மூலமாகக் காண முடிந்தது. ஐரோப்பாவில் சஞ்சிகை வெளியீடு என்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதை நான் அறிந்தவன்.

சுவடுகள் தரத்திலும் வடிவ அமைப்பிலும் புதியதோர் இலக்கிய வடிவத்தினை, எமது சமகாலப் பிரச்சனைகளைத் தொட்டவண்ணம் சுமந்து நிற்கிறது.

பொருளாதார பிரச்சனை காரணமாக நல்ல தரத்துடன் இருக்கும் சுவடுகளை நிறுத்திவிடவேண்டாம்.

துரை.சிவபாலன்,
பாலர்மோ,
இத்தாலி.

......

செய்தியிலும் தரத்திலும் அச்சு முறையிலும் சுவடுகள் ஐரோப்பிய இதழ்களிலேயே சிறப்பானதாக இருக்கிறது.

........

சுவடுகள் இதழில் புகழேந்தி நூலுக்காக விளம்பரம் வெளியிட்டமைக்கு நன்றி.

பாதிப்பணம்தான் அவர் நூலுக்கு இதுவரை கிடைத்திருக்கிறது. இதுவரை வெளிநாட்டு நண்பர்கள் ஒருவர்கூட பணம் அனுப்பவில்லை. ஓவியம் பற்றிய பிரக்ஞை குறைவாக நம்மவரிடம் இருக்கிறது.

......

ப.திருநாவுக்கரசு,
சென்னை.

www.tamilarangam.net





# நடிகரும் டைரக்டர் ஆகலாம்



காலம் இப்ப அப்படி. நடிகர்மார் மறு நாள் சொல்லாமல் கொள்ளாமல் டைரக்டர் ஆகிவிடுகின்றனர். அதே போல் டைரக்டர்மார்களும் மறுநாள் நடிகர்களாகி விடுகின்றனர். தமிழ்த் திரையுலகில் இதை மறைந்த எம்.ஜி.ஆர். பல வருடங்களின் முன்னரே செய்திருந்தார். ஆயினும் அவர் ஒரு சில படங்களைத்தான் செய்திருந்தார். இவர் தொடர்ச்சியாக இதைச் செய்யவில்லை. இதற்குப் பின் எண்பதுகளில் பாக்கியராஜ் ஒரு தொடர்ச்சியான தசாப்தத்தை உருவாக்கி இருந்தார். இப்படிப் பல நடிகர்கள் டைரக்டர்களாக இன்றய தமிழ் உலகில் உலாவருகின்றனர். இந்த வழியில் அடுத்ததாக நடிகர் கமலஹாசன் டைரைக்ஷன் துறையில் காலடி வைக்கவுள்ளார்.

இந்தக் காற்று தமிழ் நாட்டில் மட்டும் வீசுகின்றது என நினைத்து விடாதீர்கள். பல வருடங்களுக்கு முன்னரே இந்தக் கலாச்சாரம் ஹொலிவூட் திரை உலகில் ஆரம்பித்து விட்டது. இதில் முக்கியமானவராக இருந்தவர் பிரபல நகைச்சுவை மன்னன் சார்லி சாப்ளின் ஆவார். ஆயினும் வேறு பலரையும் நாம் அடையாளம் காணமுடியும். நடிகர்களிடம் எழும் டைரக்டர் ஆகும் கனவுக் காய்ச்சல் காலம் காலமாக இடம்பெற்று வரும் ஒன்று தான். இன்று இந்த 'நடிகர் – டைரக்ஷன்' கலாச்சாரம் முன்னரிலும் முதன்மை பெற்று வருகின்றது. இந்த வகையில் இன்று கிளின்ற் ஈஸ்றவுட், கெவின் கொஸ்ற்னர், வோறன் பீற்றி, கெனத் புறாணா என்பவர்கள் நடிப்பு, டைரக்ஷன் ஆகிய இரு துறைகளிலும் வெற்றி பெற்றுள்ளனர். ஆயினும் சில்வெஸ்ரர் ஸ்ரலோன், ஜோன் வெய்ன், பேட் றெணோல்ட்ஸ், எடி மே:.பி போன்ற பிரபல நடிகர்களும் டைரக்ஷன் துறையில் ஈடுபட்ட போதும் வெற்றி பெறவில்லை. நம் தமிழ் துறையில் நடிகையினர் யாரும் இரு துறையிலும் வெற்றிகரமாக ஈடுபட்டவர்கள் என்று பெயர் குறிப்பிட்டு சொல்ல முடியாது. ஹொலிவூட்டிலும் விரல்விட்டு எண்ணி விடும் அளவில் தான் நிலைமை! இன்று பார்பரா ஸ்ட்ரெய்ஸான்ட் இந்த வகையில் முன்னணியில் உள்ளார்


○ சினிமாப் பித்தன்.

www.tamilarangam.net

இம்மாதப் புகைப்படம்

ஓர் அகதியின் புன்னகை

நன்றி: Refugees



SUVADUGAL, A Tamil monthly from Norway, Issue nr57, May'94 (Published in July)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்